Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


ஒறிஜினல் கோலம் சாறி, பட்டு வேட்டிகள், கோலம் கூறை சாறிகள், பட்டு வேட்டி வகைகள் மற்றும் றெடிமெட் ஆடைகள், பல்வேறு ரக துணி வகைகள், பிளவுஸ் துணி வகைகள் யாவற்றுக்கும் வருகை தாருங்கள்

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
41, பெரிய கடை, யாழ்ப்பாணம். (சி-551)
T.P.No. 222 2063

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 20 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 29 (04.03.2003) செவ்வாய்க்கிழமை இதழ் :153

# இலங்கை - இந்திய மீனவரிடையே பேசாலைக் கடலில் பெரும் மோதல்

## 20 இந்திய மீனவர்கள் காயம்; 16 படகுகள் தடுத்துவைப்பு

(நமது நிருபர்)

**மன்னார் - பேசாலைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிக்க வந்த இந்திய மீனவர்களுக்கும், உள்ளூர் மீனவர்களுக்கும் இடையே நேற்று மாலை - கடற்பரப்பில் வைத்துக் கடுமையான மோதல் நடைபெற்றது.**

நேற்று மாலை ஆறு மணியளவில் நடந்த இம்மோதலைத் தொடர்ந்து - அத்துமீறி மீன்பிடிக்க வந்த 64 இந்திய மீனவர்கள் அவர்களது பதினாறு இழுவைப் படகுகளுடன் - பேசாலை மீனவர்களால், பேசாலை மீனவர் சங்கத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கைகலப்பில் படுகாயமடைந்த 20 இந்திய மீனவர்களில் ஒருவர் - ஆபத்தான நிலையில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவருடன் இன்னொரு இந்திய மீனவரும் படுகாயங்களுடன் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டார். இவர்களுக்கு தலையிலேயே படுகாயங்கள் காணப்பட்டன.

இம்மோதலில் - பேசாலையைச் சேர்ந்த மீனவர்கள் நால்வரும் படுகாயமடைந்த நிலையில் பேசாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இக்கைகலப்பினால் மன்னார் கடற்கரைப் பகுதியெங்கும் நேற்று நள்ளிரவுவரை பதற்றம் காணப்பட்டது. காயமடைந்த உள்ளூர் மீனவர்களும் நேற்று நள்ளிரவு பேசாலையிலிருந்து மன்னார் வைத்திய சாலைக்கு எடுத்துவரப்பட்டனர்.


வன்னி திரும்பிய பின்னர், பிரபாவுடன் அளவளாவும் பாலா.


பாலசிங்கம் தம்பதியுடன் உரையாடுகிறார் தலைவர்.

## அமெரிக்கத் தூதரக விடுதி யாழ்.நகரில் அமைக்கப்படும்

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் சுற்றுலாவிடுதி ஒன்று யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ளது. யாழ்.நகரை அண்டிய பகுதியில் இச்சுற்றுலா விடுதியை அமைப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

எதிர்காலத்தில் அமெரிக்க அரசின் பிரதிநிதிகளும், கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகளும் அடிக்கடி யாழ்ப்பாணம் விஜயம் செய்யவேண்டியுள்ளதால், இந்த அதிகாரிகளின் யாழ். வரும்போது, அவர்கள் தங்குவதற்காகவே இச்சுற்றுலா விடுதி அமைக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த விடுதியை அமைப்பது தொடர்பான நடவடிக்கைகளை கொழும்பிலிருக்கும் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (க)

## பிரபா - கண்காணிப்புக்குழு சந்திப்பு நாளை நடக்கும்!

தலைவர் வே.பிரபாகரனை நாளை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தற்போதைய தலைவர் புறூவ் ஹொவ்டே, புதிய தலைவர் ரெலவ்சன் ஆகியோர் சந்திக்க இருக்கின்றனர்.

இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அடேல் பாலசிங்கம், தமிழ்ச்செல்வன் ஆகியோர் உடனிருப்பர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சதீஸ் நம்பியாரின் அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை

ஓய்வுபெற்ற இந்திய இராணுவ அதிகாரி சதீஸ் நம்பியார் தயாரித்த உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான அறிக்கைகள் இதுவரை இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த அறிக்கை - ஜப்பானில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னதாக இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்படலாம் என்று அறியவருகின்றது.

முன்னதாக ஜெனரல் நம்பியாரின் பாதுகாப்பு வலயம் தொடர்பான அறிக்கை விரைவில் இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்படுமென செய்திகள் வெளியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## வீட்டின் முற்றத்தில் மிதிவெடி; கிளிநொச்சியில் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

வீட்டு முற்றத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடி வெடித்ததில் இளம் குடும்பஸ்தர் வலது காலை இழந்தார்.

நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் கிளிநொச்சி பன்னங்கண்டியில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த அன்னராஜ் யோகேஸ்வரன் (வயது 23) என்பவரே காலை இழந்தவராவார். இவர் நேற்றுக்காலை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அருவி வெட்டும் வேலை முடித்துவிட்டு வீடு திரும்பிய இவர் குளிக்கச் சென்றவேளை, வீட்டுமுற்றத்திலிருந்த மிதிவெடி வெடித்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக இவர் இந்த வீட்டில் வசித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

காயமடைந்த இவர், நேற்று செஞ்சிலுவைச்சங்க வாகனத்தில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டார்.

சம்பவ இடத்திற்கு சென்ற மிதிவெடி, கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் அங்கு பரிசோதனைகளை மேற்கொண்டனர். (ச,60)

## தனது உயிருக்கு இப்பொழுதும் அச்சுறுத்தல் என்கிறார் ஜனாதிபதி

இன்னமும் தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா பதுளையில் நடந்த கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

இராணுவ அதிகாரிகளும், புலனாய்வு அதிகாரிகளும் இதனைத் தமக்குத் தெரிவித்ததாகக் கூறிய ஜனாதிபதி சந்திரிகா, புலிகள் மீதான தமது விமர்சனம் மட்டும் தனது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்துவதாக இல்லை என்றும், தனது கட்சிக்குள்ளும் உயிராபத்து விளைவிக்கக்கூடிய நிலை இருப்பதாகவும் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் மக்களிடம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அரசியல் இயக்கமாக மாற ஏ.என்.சியிடம் ஆலோசனை

### புலிகள் கேட்டதாக தென்னாபிரிக்கப் பத்திரிகை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு, தங்கள் இயக்கத்தை ஒரு இராணுவ அமைப்பு என்ற நிலையிலிருந்து, ஒரு அரசியல் இயக்கமாக மாற்றுவது குறித்து தென்னாபிரிக்க விடுதலை இயக்கமான ஆபிரிக்க தேசியக் காங்கிரஸிடம் ஆலோசனை தருமாறு கேட்டுள்ளனர் என்று தென்னாபிரிக்க பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள் ஆயுதப் போராட்டக் குழுவான ஏ.என்.சியிடம் சூட்சுமங்கள் மலிந்த அரசியல் உலகிலே சமரசம் செய்கின்ற வழியில் தங்களுக்கு உதவுமாறு புலிகள் கேட்டுள்ளனர்.

கடந்த மாதம் ஏ.என்.சி அமைப்பின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்


எல்லாருக்கும் யாழ்ப்பாணத்தில இப்ப வலு வாரப்பாடு போல கிடக்கு...

## வெளிநாட்டுக்கான தொலைபேசி அழைப்புக் கட்டணம் குறையும்?


சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்திடம், இதுவரை இருந்துவந்த சர்வதேச தொலைபேசி அழைப்புக்களுக்கான தொடர்பை ஏற்படுத்தும் தனி உரிமை நேற்றுடன் நீக்கப்பட்டது.

அத்துடன், சர்வதேச தொலைபேசி சேவைகளின் உரிமை, 20 தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சர்வதேச அழைப்புகளுக்கான கட்டணம் குறைவடையலாம் என தொலைத்தொடர்பு ஆணைக்குழு அறிவித்துள்ளது.

சர்வதேச தொலைபேசி உரிமை

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.
(சி-518)



நேற்றுமுன்தினம் கிளிநொச்சியை வந்தடைந்த அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் பாரியாரும் வந்திறங்கும், வரவேற்கப்படும், புதுக்குடியிருப்புக்கு புறப்படும் காட்சிகள்.

# அடுத்த இரு வாரங்களுள் இராஜதந்திரிகள் பிரபாவைச் சந்திக்க வன்னிக்குச் செல்வர்!

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடனான சந்திப்புக்களுக்காக வெளிநாடுகளிலிருந்து இராஜதந்திரிகள் அடுத்த இருவாரங்களுக்குள் வன்னிக்கு வரவுள்ளதாகத் தெரியவருகின்றது.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வன்னிக்குத் திரும்பி, சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு விளக்கிக் கூறியதையடுத்தே வெளிநாட்டு இராஜதந்திரிகளின் இந்த விஜயங்கள் இடம்பெறவுள்ளன.

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் ஆகியோர் எதிர்வரும் 13 ஆம் திகதி பிரபாகரனைச் சந்திப்பதற்காக வன்னிக்கு வரவுள்ளனர்.

இதேவேளை, கனடாவிலிருந்து அரசியலமைப்பு ஆலோசனை நிபுணர் குழுவொன்றும், சர்வதேச மனித உரிமைகள் ஸ்தாபனத்தின் முன்னாள் தலைவரான இயன் மார்ட்டின் தலைமையிலான மனிதவுரிமைகள் அதிகாரிகள் குழுவொன்றும் அடுத்த இருவாரங்களுக்குள் பிரபாகரனைச் சந்திப்பதற்காக வன்னிக்கு வரவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் பெண்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயவும், அவற்றுக்கான தீர்வுகளைச் சமர்ப்பிக்கவும் அமைக்கப்பட்ட உபகுழுவின் தலைவரான நோர்வேயைச் சேர்ந்த பிரமுகரும் வன்னிக்கு வரவுள்ளதாகத் தெரியவருகின்றது.

# கோட்டைகள் ஆராயும் நிபுணர் மிலிந்த, சந்தகிரியுடன் வந்தார்!

## காரைநகர் கடற்கோட்டைக்கும் விஜயம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வந்த அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையிலான குழுவில் - நெதர்லாந்து நாட்டுத்தூதுவர் மற்றும் நெதர்லாந்தைச் சேர்ந்த ஆஷ்லி டீ வோஸ் என்ற புராதனக் கோட்டைகள் குறித்து ஆராயும் ஆய்வாளர் ஒருவரும் இடம்பெற்றிருந்ததாகத் தெரியவருகின்றது.

அமைச்சர் மிலிந்த மொறகொட- முப்படைத் தளபதிகளுடன் இவர்கள் காரைநகரிலுள்ள கடற்கோட்டைக்குச்சென்று அதனைப் பார்வையிட்டுள்ளனர். டச்சுக்காரர்களால் கட்டப்பட்ட இந்தக் கோட்டையில் கடற்படையினர் நிலைகொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# உலகில் யுத்தத்தின் மத்தியில் கல்வி கற்ற சமூகம் எமதே!

## - கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் உரை -

உலக வரலாற்றில் யுத்தம் நடந்துகொண்டிருந்தபோதும் கல்வி கற்ற ஒரே சமூகம் வடக்கு-கிழக்கு மக்கள் சமூகம்தான் எனறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தெரிவித்துள்ளார்.

புலோப்பளை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, இந்தப் பாடசாலை பெரும் அழிவுகளைச் சந்தித்துள்ளது. விரைவில் இப்பாடசாலைக்கு புதிய கட்டடம் ஒன்றை நிறுவ அமைப்பு ஒன்று முன்வந்துள்ளது என்றும் தெரிவித்தார்.

# சுதந்திரக்கட்சிக்குள் விரோதமாகச் செயற்படுபவரை எதிர்கொள்ளத்தயார்!

## - எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ சவால் -

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருக்கும் சிலர் அண்மைக்காலமாகத தமக்கு எதிராகவும் விரோதமாகவும் செயற்பட்டு வருகின்றனர் என்றும், இவர்களை எதிர்கொள்ளத் தான் தயாராக இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடு நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில், நாடாளுமன்றத்தில் எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பான இரண்டு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. ஜே.வி.பியுடனான பேச்சுகள் வெற்றியளித்துவருகின்றன. எனினும் - கட்சியின் மத்திய குழுவின் தீர்மானத்தின் பின்னரே இறுதி முடிவுகள் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# ஈராக் நாட்டின் மீது போர் வேண்டாமென ஒரு லட்சம் பாகிஸ்தானியர் ஆர்ப்பாட்டம்



பாகிஸ்தானில் பல்லாயிரக் கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்க வேண்டாம் எனக் கோரி, நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. ஆர்ப்பாட்டத்தின்போது, யுத்த எதிர்ப்பு சுலோகங்களையும், அல்-கெய்டா அமைப்பின் தலைவர் பின்லேடனது படத்தைத் தாங்கியவாறும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உலகவலம்

அமெரிக்காவின், ஈராக் மீதான யுத்தத்திற்கு பாகிஸ்தான் ஆதரவு கொடுக்க வேண்டாம் எனக் கோரிக்கைகள் பல தரப்பிலிருந்தும் விடுக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஐ.நாவின் பாதுகாப்புச் சபையில் பாகிஸ்தான் தற்பொழுது தற்காலிக உறுப்புரிமை பெற்றிருப்பது இந்தக் கோரிக்கை வலுப்பெறக் காரணமெனக் கூறப்படுகிறது.

# ஈராக் மக்களுக்கு உதவுமாறு யூ.என்.எச்.சி.ஆர். கோரிக்கை

ஈராக்கில் யுத்தம் வெடிக்குமாயின், பொதுமக்களின் மனிதாபிமானத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு கூடியளவு பண உதவிகள் தேவையென அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் முகவரகம் அறிவித்துள்ளது.

அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் முகவரகத்தின் தலைமைப் பேச்சாளர் கருத்து தெரிவிக்கையில் - தாம் ஏற்கனவே ஈராக்கிய பொதுமக்களிற்கு எழக்கூடிய மனிதாபிமானத் தேவைகள் தொடர்பாக உலகநாடுகளுடன் கலந்தாலோசித்து வருவதாகவும், உலகளாவிய ரீதியில் தமது அமைப்புக்கு பண உதவிகளைக் கோரவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆனால், தமது கோரிக்கைகளுக்கு எந்தவொரு சர்வதேச சமூகமும் செவிசாய்க்கவில்லை என்றும், யுத்தம் ஆரம்பிக்குமாயின் தமது அமைப்பிடமே எல்லோரும் வருவார்கள் எனவும் அவர் மேலும் கருத்து வெளியிட்டுள்ளார்.

# இன்றைய நாள் இனிய நாள்

**04-03-2003 - செவ்வாய்க்கிழமை**

| | |
|---|---|
| மேடம் :- | பயனற்ற பிரயாசம், நற்கீர்த்தி, பொருள்வரவு, பெரியோர் மதிப்பு, பிரயாணம். |
| இடபம் :- | வியாதி, பணக்குறைவு, இனசனகொண்டாட்டம், சரீர சுகக்குறைவு. |
| மிதுனம் :- | நன்மதிப்பு, புதிய ஸ்தானம், அதிகாரம், இனசன விரோதம், காரிய வெற்றி. |
| கர்க்கடகம் :- | பயனற்ற பிரயாசம், இடையூறு, குடும்ப மனஸ்தாபம், மனக்கவலை. |
| சிங்கம் :- | பணக்குறைவு, சிநேகலாபம், காரிய விக்கினம், தேக மெலிவு, தடுமாற்றம். |
| கன்னி :- | இல்லச்சிறப்பு, நன்மதிப்பு, கோபமிகுதி, தனதானிய விருத்தி, காரியத்தில் சோம்பல். |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் :- | தாழ்ந்தநிலை, மனக்கவலை, வாக்குவசீகரம்,. காரியனுகூலம், சந்தோசம். |
| விருச்சிகம் :- | பெண்களால் நன்மை, பிரயாணசுகம், வாகனயோகம், அதிகசெலவு. |
| தனு :- | கொடுக்கல்வாங்கல் பிணக்கு, வீண்பழிகேட்டல், விஷபயம், தருமகாரிய சித்தி. |
| மகரம் :- | இல்லச்சிறப்பு, காரிய சித்தி, சிநேக லாபம், சௌபாக்கியம், இலட்சுமிகரம். |
| கும்பம் :- | உடற்சோர்வு, பிரயாசமிகுதி, மனக்கவலை, தாழ்ந்த நிலை, ஏமாற்றப்படுதல். |
| மீனம் :- | புத்திரரால் மகிழ்ச்சி, வாகன சுகம், பொருள்வரவு, வாக்கு வசீகரம். |

# பகிரங்க அறிவித்தல்

புலோலி, புற்றளை மகாவித்தியாலயம் - தொடர்ச்சியாகப் பல. ஆண்டுகளாகப் பாவித்துவரும் புற்றளை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்திற்கு கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தை எல்லைப்படுத்தி, அதற்காக உத்தரவுபெற்ற நில அளவையாளரினால், படம் வரையப்பட்டு ஆவணப்படுத்தும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

இவ்விளையாட்டு மைதானத்தைச் சீர்செய்து, நன் நிலையில் கொணர்ந்து, மாணவர்கள் நல்லமுறையில் பாவனை செய்யக்கூடியதாக திருத்தவேலைகள் செய்வதற்கு ஊரவர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் ஆகியோரிடமிருந்து நன கொடை உதவி கோரிநிற்கின்றோம்.

*பழைய மாணவர் சங்கம்,*
*புற்றளை மகாவித்தியாலயம்,*
*புலோலி.*

வ.செல்வராசன்,
செயலாளர்.

(சி-651)

ராஜா யாழ்ப்பாணம்.
கடைசி சில தினங்கள்
விஜய், ஸ்நேகா, மணிவண்ணன், வடிவேல் நடித்த
வசீகரா
10.30, 2.30, 6.30
5 ஆம் திகதி வரை இரவு 9.30 மட்டும்.
M.I. 2
(சி-628)

நிறஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
அஜித், மாளவிகா நடித்த
உன்னைத்தேடி
U 571
நீர்மூழ்கிக் கப்பலில் நடைபெற்ற அதிரடித் தாக்குதல் நிறைந்த படம்.
(சி-627)

# மீளக்குடியமர்ந்த 2 இலட்சம் குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு மிகவிரைவில்!

## நிதியுதவி வழங்க உலகவங்கி இணக்கம்

(யாழ்ப்பாணம்)

வட- கிழக்குப் பகுதிகளில் மீளக் குடியமர்ந்த இரண்டு இலட்சம் குடும்பங்களுக்குத் தலா இருபத்தையாயிரம் ரூபா வழங்குவதற்குத் தேவையான நிதியுதவியை வழங்க உலக வங்கி முன்வந்துள்ளது.

மேற்படி இரண்டு இலட்சம் குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவை வழங்குவதற்குச் சுமார் 50 மில்லியன் அமெரிக்க டொலர் தேவையாகவுள்ளது.

ஏற்கனவே, முதற்கட்டமாக உலக வங்கியால் வழங்கப்பட்ட நிதியில் 12 மில்லியன் அமெரிக்க டொலர் இக்கொடுப்பனவை வழங்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

மேலும் 5 மில்லியன் அமெரிக்க டொலரை அடுத்தவாரமளவில் உலகவங்கி வழங்கவுள்ளது.

அதேபோல, மிகுதிப்பணத்தையும் வழங்குவதற்குத் தற்போது உலக வங்கி முன்வந்துள்ளது. இதற்கான உறுதிமொழியை உலகவங்கி அதிகாரிகள் அரசிற்கு வழங்கியுள்ளனர். (க)

## திருப்பாடுகளின் காட்சி நாடகப் பிரதி வழங்கும் விழா

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்றத்தினர் தவக் காலத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் தயாரித்து வழங்கும் திருப்பாடுகளின் காட்சி ஆற்றுகையின் - இவ்வருடத்திற்கான திருப்பாடுகளின் காட்சி நாடகப் பிரதிகள் வழங்கும்நிகழ்வு நாளை இடம்பெறவுள்ளது.

திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது மணிமண்டபத்தில் மாலை 4.30 மணியளவில் இடம்பெறும் இந்நிகழ்வில் திருப்பாடுகளின் காட்சி ஆற்றுகையில், தம்மையும் இணைத்துக்கொள்ள விரும்பும் இருபாலாரையும் கலந்துகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

# சில செயலாற்று அதிகாரங்களை பிரதமருக்கு வழங்கவுள்ளேன்

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

தெற்காசியாவிலுள்ள சில நாடுகளும், மலேசியாவும் - இலங்கையை விட அபிவிருத்தியில் முன்னேற்றம் அடைந்துவிட்டன. எமது நாட்டின் பின்னடைவுக்குக்காரணம், கடந்த 30 வருடங்களாக நாட்டை ஆண்ட தலைவர்களின் குறைபாடேயாகும்.

- என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 5 ஆவது சமூக வானொலியை அங்குரார்ப்பணம் செய்து வைத்த வைபவத்திலே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசியற்தலைவர்கள் அனைவரும் தமக்கிடையிலான வேறுபாடுகளைக் கைவிட்டு, தேசிய நலன்கருதி ஒன்றிணைந்து செயற்படவேண்டும் எனத் தெரிவித்த ஜனாதிபதி

தன்னிடமுள்ள செயலாற்று அதிகாரங்களில் சிலவற்றைப் பிரதம மந்திரியிடம் கையளிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# மணிக்கு ஒருவர் தற்கொலை உலகளவில் 2 ஆவது இடம்!

## தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை

இலங்கையில் தற்கொலை செய்துகொள்வோரின் தொகை தொடர்ந்து அதிகரித்து வருவதால், இதனைத் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து சமூகசேவைகள் அமைச்சு தீவிரமாக ஆராய்ந்து வருவதாக அதன் செயலாளர் விஜயலட்சுமி ஜெகராசசிங்கம் தெரிவித்துள்ளார்.

அதிகமான தற்கொலைகள் இடம்பெறும் நாடுகளின் பட்டியலில் இலங்கை இரண்டாவது இடத்தில் இருக்கிறது. இங்கு மணிக்கு ஒருவர் வீதம் நாளொன்றுக்கு 24 பேர் தற்கொலை செய்துவருகின்றனர்.

1995 ஆம் ஆண்டு இலங்கையில் 8519 தற்கொலைகள் இடம்பெற்றன. இதன்மூலம் அதிகமாக தற்கொலை செய்துகொள்வோர் உள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை முதலாம் இடத்தைப் பிடித்திருந்தது.

2000 ஆம் ஆண்டில் இலங்கையில் தற்கொலை செய்துகொண்டோரின் எண்ணிக்கை 5412 ஆகக் குறைவடைந்தது. இலங்கையில் தற்கொலை செய்துகொள்வோரில் இளவயதினர் மற்றும் பதினெண்வயதினர் அதிகமாக இருப்பதாகப் பேராதனைப் பல்கலைக்கழகச் சமூகவியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கருணாதிஸ்ஸ அத்துகோரள தெரிவித்தார்.

வறுமை, அடிப்படை வசதிகளின்மை போன்ற சமூக, கலாசாரப் பிரச்சினைகளாலும், காதற்தோல்வி, பரீட்சைகளில்தோல்வி, பாலியல் பிரச்சினைகளால் - வாழ்க்கையில் விரக்தி, சமூகத் தொடர்புகளின்மை போன்ற உளவியல் பிரச்சினைகளாலும்தான் அதிகமான தற்கொலைகள் இடம்பெறுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

1991 ஆம் ஆண்டுககும், 2000 ஆம ஆண்டுக்கும் இடைப்பட்ட காலததில் 70 ஆயிரம் இலங்கையர்கள் தற்கொலை செய்துள்ளனர். இதனால் தேசிய ரீதியில் உளவளத்துணை ஆலோசனை நிலையங்களை அமைபபதறகான நடவடிக்கைகளில் சமூக சேவைகள் அமைச்சு ஈடுபட்டுவருகின்றது.

# பேச்சுகளில் ஈடுபடும் குழுவுக்கு ஊடகத்துறையினர் அழுத்தமாம்!

## அமைச்சர் மிலிந்த கூறுகிறார்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடும் குழுவினருக்கு, ஊடகத்துறையினர் தேவையற்ற அழுத்தங்களைப் பிரயோகிப்பதாக அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்தார்.

இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தில் உரையாற்றியபோதே அமைச்சர் மிலிந்த மொறகொட இதனைத் தெரிவித்தார்.

ஒவ்வொருமுறையும் பேச்சுக்கள் முடியும் முன்னர் உறுதியான முடிவுகள் பற்றி கலந்தாலோசிக்கும்போது, தேவையற்ற கேள்விகளைக் கேட்டு ஊடகவியலாளர்கள் அழுத்தத்தை ஏற்படுத்துகின்றனர் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 10.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திருமதி. பி.எவ்.சின்னத்துரை தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் - பிரதிக் கல்விப் பணிப்பாளர் மீரா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

## யாழ்ப்பாணத்தின் இருவேறிடங்களில்

# சிவராத்திரி இரவில் வீதியில் தாக்குதல்கள்!

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி தினத்தில் இரவு வேளையில் நடமாடிய இருவர் - இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணிக்கு உரும்பிராய் துண்டி வைரவர் கோயிலுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய இளைஞர்களை, வழிமறித்த நான்குபேர் திருடர் எனக் கூறி தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தின்போது, காயமடைந்த கோண்டாவில் செபஸ்தியார் வித்தியாலய வீதியைச் சேர்ந்த- கந்தையா கணேசபதி (வயது 20) என்பவரே காயமடைந்தவராவார். இவரது தலையில் பலத்த அடிகாயங்களும் காணப்படுகின்றன.

அதேவேளை - கடந்த சனிக்கிழமை இரவு 9 மணியளவில் கோயிலுக்குச்சென்று திரும்பிய குடும்பஸ்தர் ஒருவரும் வீதியில் வைத்து பலமாகத் தாக்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலி சிவன் கோயிலுக்குச்சென்று திரும்பியவேளை, இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இதேயிடத்தைச் சேர்ந்த ந.பாலசிங்கம் (வயது 45) என்பவரே பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ச)

## தமிழ் - சிங்கள அகராதி

களனிப் பல்கலைக்கழக மொழியியற்துறையைச் சார்ந்த பேராசிரியர் டபிள்யு.எஸ்.கருணதிஸ்ஸவால் தொகுத்து வெளியிடப்பட்ட தமிழ் - சிங்கள அகராதி வெளிவந்துள்ளது.

இந்த அகராதியில் 80 ஆயிரம் தமிழ்ச் சொற்களும், அவற்றினை ஒத்த சிங்களச் சொற்களும் 1037 பக்கங்களில் ஆசிரியரால் தொகுக்கப்பட்டுள்ளது. இவ்வகராதியில் இறுதியில் தரப்பட்டுள்ள பின்னிணைப்புக்களாக - தாவரங்கள், விலங்குகள், தேசப்பெயர்கள், ஊர்ப்பெயர்கள் என்று பல அம்சங்கள் விசேடமாகச் சேர்க் கப்பட்டுள்ளன.

தமிழ்- சிங்கள வாசகர்கள் பயனடையக்கூடியமுறையில் இவ்வகராதி வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# குறுகிய காலத்துக்குள் முன்னேற்றமாக புனர்வாழ்வு உபகுழு செயற்படுகிறது!

## பேணார்ட் குணதிலக தெரிவிப்பு



(கொழும்பு)

அமைக்கப்பட்ட குறுகிய காலத்துக்குள் வடக்கு-கிழக்கு உடனடிப் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைக்கான உபகுழுவின் பணிகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டியுள்ளதாக அரசாங்கத்தின் சமாதானச் செயலகப்பணிப்பாளர் பேணாட் குணதிலக தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நடந்த சிறான் கூட்டத்தின் பின்னர், கொழும்பு திரும்பிய பேணாட் குணதிலக - அங்கு செய்தியாளர் மத்தியில் பேசியபோதே இதனைத் தெரிவித்தார்.

சிறானின் செயற்பாடுகளையிட்டு அரசாங்கம் திருப்தியடைவதாகவும் தெரிவித்த அவர், வடக்கு - கிழக்கு அபிவிருத்தி தொடர்பாகவும், புனர்வாழ்வு தொடர்பாகவும் 477 கருத்திட்டங்கள் சிறான் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் கூறினார்.

இந்தக் கருத்திட்டங்கள் உப குழுவின் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேலதிக நடவடிக்கைகளுக்காகச் சிறான் பணியகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் பேணாட் குணதிலக மேலும் தெரிவித்துள்ளார். (க)




மட்டக்களப்பில் கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கத்தினால் புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஒருவருடப் பூர்த்தியையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் - நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், செல்வம் அடைக்கலநாதன், சங்கத்தலைவர் இரா.துரைரட்ணம், மட்டு-அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஸ், மட்டு-அம்பாறை மருத்துவப்பிரிவுப் பொறுப்பாளர் வாமன், மட்டு-அம்பாறை துணை அரசியல்பொறுப்பாளர் கிருசன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# உயர்பாதுகாப்பு வலயமாக மேய்ச்சல் நிலம்; தம்பலகாமத்தில் தமிழ்மக்கள் பெரும்பாதிப்பு!

(கொழும்பு)

தம்பலகாமத்தில் தமிழருக்குச் சொந்தமான மேய்ச்சல் நிலங்களைக் கடற்படையினர் உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியிருப்பதால் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

தம்பலகாமத்தில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் கால்நடைகளை நம்பி வாழ்ந்துவருகின்றன. கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்களைப் படையினர் - உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம்செய்து தடைசெய்திருப்பதால், கால்நடைகளை மேய்ச்சலுக்குவிட முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

அட்டவணைக்குளத்திற்கு அருகிலுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்புள்ள மேய்ச்சல் நிலங்களே உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் நடந்த கலந்துரையாடலிலும், அரச செயலகத்தில் நடந்த கலந்துரையாடலிலும் விவாதிக்கப்பட்டுள்ளது.

அரச செயலகத்தில் நடந்த மாநாட்டில- திருமலை அரச அதிபர் நெலும் தெனிய, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தன், துரைரட்ணசிங்கம் ஆகியோரும், கடற்படை அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

கூட்டத்தில் கலந்துகொண்ட கடற்படை அதிகாரிகள்- அட்டவணைக்குளப்பகுதியின் நிலைமையை நேரில் அவதானிக்கப் போவதாக சம்பந்தன் கேட்டபோதும், அதற்கு மறுத்துவிட்டனர்.

பின்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, கடற்படைத் தளபதி தயா சந்தகிரி ஆகியோருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியதையடுத்தே, அட்டவணைக்குளப்பகுதியைப் பார்வையிடக் கடற்படையினர் அனுமதி வழங்கினர்.

## தேசிய ரீதியில் கிளிநொச்சி அணிக்கு முதலிடம்

அண்மையில் நடைபெற்ற தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அணி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. இவ்வணி தமிழ்மொழியிலேயே கட்டளைகளை வழங்கி முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் கலந்துகொண்ட ஏனைய சில மாவட்ட அணிகள் தமது கட்டளைகளைச் சிங்களத்தில் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : ப.திரிகரன்
முகவரி: அராலி தெற்கு, அராலி.

முதலாவது அகவையில்

பெயர் : பி.அபிஷா
முகவரி: விராவோடை, அல்வாய் வடக்கு.



இரண்டாவது அகவையில்



பெயர் : ஸ்ரீ.வேதிகா
முகவரி: இல.38, சிவபுரம், கிராஞ்சி, பூநகரி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:---------------------------------

முகவரி:---------------------------------

பிறந்த ஆண்டு:---------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

--------------------
பெற்றார் ஒப்பம்


## இல்ல மெய் வல்லுநர் விளையாட்டுப் போட்டி

யாழ்.திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி அதிபர் அருட் சகோதரி மேரி ஜோலண்ட் தலைமையில் இன்று பிற்பகல் 2 மணியளவில் சென்.பற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சின் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் மில்ட்டன் அமரசிங்கவும், சிறப்பு விருந்தினராகப் வணபிதா எம்.போல் நட்சத்திரம் அடிகளாரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

☼ ☼ ☼

(வடமராட்சிக் கிழக்கு)

புலோலி புற்றளை மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் வடமராட்சி வலயக்கல்வி உதவிப்பணிப்பாளர் எஸ். அருளாந்தம் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (17)

## சர்வோதய உதவித் திட்டம்

கடந்த காலங்களில் மிதிவெடியில் சிக்கிப் பாதிப்புற்றோருக்கும், யுத்தத்தினால் பாதிப்படைந்தோருக்கும் சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்கு முகமாகவும், குடும்ப வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்தோடும் யுனிசெப் உதவியுடன் கடன் திட்டம் ஒன்றை சர்வோதய இயக்கம் ஆரம்பித்துள்ளது.

## கிளிநொச்சியில் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை

(பளை)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 95 பாடசாலைகளுக்கும் 1560 நிரந்தர ஆசிரியர்கள் தேவைப்படுகின்றபோதிலும், 680 நிரந்தர ஆசிரியர்கள் மட்டுமே சேவையில் உள்ளனர்.

ஏனைய வெற்றிடங்களுக்கு 452 தொண்டர் ஆசிரியர்களே வேதனம் இன்றி கடமைபுரிந்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (115)

## நீரிழிவு நோய் DIABETES

பகுதி 34

- ச.ஆ.கோபாலமூர்த்தி.

உயர்நிலை நீர்த்தாங்கிகளுள் (OVERHEAD TANK) நுளம்புக் குடம்பிகள், கரப்பான் பூச்சிகள், அட்டைகள் போன்றவை இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே அடிக்கடி தண்ணீர்த்தாங்கியுள் குளோரின் தூளைக் கரைத்து ஊறவிட்டு, அதனை இடையிடையே கழுவவேண்டும். தண்ணீர்த் தாங்கியுள் சருகுகள், பொலித்தீன்பைகள் விழாதவாறும் சூரிய வெப்பம் கிடைபபதனால் தாங்கியினுள் பாசி வளராது தடுக்குமாறும் மூடி அமைததுக் கொள்ளுங்கள். பாரமான பொருட்களை தூக்கும்போது, குனிந்து நின்று தூக்கி, நாரிநோவு ஏற்படுவதைத் தடுக்க, முழங்காலை மடித்து, பொருளைப் பற்றிக் கொண்டு முழந்தாளை நிமிர்த்துங்கள். பெரியவாளியில் ஒரு கையில் தண்ணீர் கொண்டுசெல்வதால் நாரியில் ஏற்படும் வேதனைகளைத் தவிர்க்க, இரண்டு கைகளிலும் சமவளவான வாளிகளில் தண்ணீரைக் கொண்டுசெல்லுங்கள். அதிக ஒலிபிறப்பிக்கப்படும் இடங்களிலிருந்து இயன்றளவு விலகி வாழுங்கள். (LOVE BIRDS) காதல் பறவைகளின் இரைச்சல் சினமூட்டி, இரத்த அழுத்தத்தை அதிகரிப்பதாகக் கூறப்படுவதால் அவற்றை வளர்ப்பதைத் தவிருங்கள். மின்பிறப்பாக்கிகளை (GENERATORS) அடுத்த வீட்டாருக்கு ஒலிப்பாதிப்பு ஏற்படும் இடத்தில் வைத்து இயக்கி, மின்பிறப்பாக்கிகளை அயற்சண்டை பிறப்பாக்கிகள் ஆக்காதீர்கள். அயறசண்டை தேடாதீர்கள். நாய் வளர்ப்பதைச் சாதாரணமாக எண்ணாதீர்கள். அது மிகவும் பொறுப்புடன் கையாள வேண்டிய விடயம் என உணருங்கள். நாய்களை வதிவிட எல்லைக்கு வெளியே விடுவதால் அவை விசர்நாய்களால் கடியுண்டு, உங்கள் நாய்க்கு விலங்குவிசர் தொற்றுவதுடன் - உண்ணி, தெள்ளு, இலததி போன்றவையும் தொற்றலாம் என்பதை உணருங்கள். எல்லாவற்றுக்கும் மேலாக நவீன திருடர்கள், காவலுக்கு வளர்க்கப்படும் நாய்கள் வீதிகளுக்குச் செல்லும் சந்தர்ப்பங்களில், அவற்றுக்கு உணவூட்டி அவற்றை தமது நண்பர்களாக்கிவிட்டு, கடிநாய்கள் நிற்கும் வீடுகளிலேயே சுலபமாகத் திருடிவிடுகிறார்கள். இதனால், காவல்நாய் வளர்ப்பு அர்த்தமற்றதாகிவிடுகிறது என்பதையும் உணருங்கள். நாய் மலத்தால் மாசடைந்த வீதிகளில் பந்து விளையாடி, உள்ளுறுப்புக்களைக் குடைந்துசெல்லும் நாய்க் குடற்புழுக்கள் தொற்றவும், அவை விதைகள், சூலகங்கள் ஊடறுத்துப் பாதிப்பை ஏற்படுத்துவதனால் மலட்டுத்தன்மை ஏற்படவும் சந்தர்ப்பம் இருப்பதால், நாய்மலம் இருக்கும் வீதிகளில் பந்து விளையாடாதீர்கள். நல்லெண்ணெய்யில் தேங்காய்யெண்ணை கலந்திருக்கிறதா? எனக்கண்டு பிடிக்க குளிரூட்டியைப் பயன்படுத்துங்கள். தேங்காய்யெண்ணெய் கலந்திருந்தால் ஒருநாள் முழுவதும் எண்ணைக் குளிரூட்டியில் வைக்கும்போது அது உறைந்துவிடும். உணவுப் பொருட்களை வாங்கும்போது அப்பொருட்கள் எத்திகதிவரை உபயோகிக்கத்தக்கவை. (EXPIARY DATE) என அச்சிடப்பட்டுள்ளதா என்பதையும், அத்திகதியில் மாற்றம் செய்திருக்கிறார்களா? என நன்கு அவதானித்து வாங்குங்கள். பிறரது உடைகள் அணிவதை இயன்றளவு தவிருங்கள். நீங்கள் தோல் நோய் அல்லது பங்கசு நோய்களால் பீடிக்கப்பட்டிருந்தால் உங்கள் உடைகளைப் பிறருக்குக் கொடுக்காதீர்கள்.

நடைபாதைகளில் மலிவாக விற்கப்படும் பிறநாட்டார் பயன்படுத்திய பேல் (BALE) உடைகளை வாங்கிப் பயன்படுத்தாதீர்கள். மலகூடத்தில் மலக் கோப்பையினுள் (SQATTING PAN) மாத்திரமே கழுவல்நீர் சொரியப்பட்டுத் தரை எப்பொழுதும் உலர்நிலையில் பேணப்படுகின்ற மலகூடங்களே சுகாதாரமானவை என உணருங்கள். இதனைச் செயற்படுத்த வாளியுடன் கைபிடியுள்ள கோப்பை ஒன்றை வைத்திருங்கள்.

தொடரும்.....




நமது ஈழநாடு வழங்கும்




## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: RATNAGOPALS இரத்தின கோபால்ஸ் (இணைந்த நிறுவனம்)
63, 65, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
ஃகிறோ ஃகொண்டா மோட்டார் சைக்கிளின் யாழ்ப்பாண விற்பனை முகவர்

இரண்டாம் பரிசு - 15,000

வழங்குவோர்:
1. ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்
YONEX MULTI PALACE
விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்



2. சமுத்திரா ரேட்ஸ் (லிமிட்டட்)
டீசல் என்ஜின், நெல் குற்றும், மா அரைக்கும் இயந்திரங்கள், உதிரிப்பாக விற்பனையாளர்கள்.
3/2 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

மூன்றாம் பரிசு - 10,000

வழங்குவோர்: சந்தியா மல்ரிகோட்யாட்
531, பருத்தித்துறை வீதி, நல்லூர். பிரதான வீதி, பண்டத்தரிப்பு.
Fancy goods, gift items, fevicryl & acron paint items.

ஐந்தாவது ஆறுதல் பரிசு

வழங்குவோர்: தில்லையம்பதி மோட்டோர்ஸ்
236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்!
வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!!

## உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (......................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (......................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன? (......................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (......................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (......................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ----------------------------------------
வயது: ----------------------------------------
முகவரி: ----------------------------------------
----------------------------------------



சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.

பல்சுவை அரங்கு

# சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த சார்லி சாப்ளின்

## அங்கம் - 22

(சென்றவாரத் தொடர்ச்சி)

பத்திரிகையாளர்கள் வெர்டாக்ஸ் திரைப்படத்தைப் பற்றிக் கேட்காமல், சார்லியை கம்யூனிஸ்ட் ஆதரவாயிருப்பதற்காகக் குற்றம்சாட்டினார். அவர்களுடைய கேள்விகளுக்கு அமைதியாகவும், நியாயமாகவும் கூறிய பதில்களைச் செவிமடுத்துக் கேட்க மறுத்தனர்.



போர்க்காலங்களில் ரஷ்யர்களின் துணிவை, தான் மெச்சுவதாகவும்-தனக்குப் பரந்த எண்ணம் கொண்ட நண்பர்கள் இருப்பதாகவும் சார்லி சந்தோஷமாக ஒப்புக்கொண்டார். கறுப்பு நடிகர் பால்ரோப்சன், நாடக ஆசிரியர் பெர்த்தோல்ட் பிரெக்ட் போன்றவர்கள் உடனான தன் நட்பைப் பெருமையாகக் கருதினார். இருவருமே கம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள்.

தனக்குச் செய்த உதவிகளுக்கு என்றுமே சார்லி அமெரிக்காவுக்கு நன்றிக்கடன்பட்டவனாக இருந்தார். ஆனால் முதலாவதும், முக்கியமானதுமாக அவர் தன்னை இந்த உலகத்தின் குடிமகனாகக் கருதினார்.

"நான் கம்யூனிஸ்ட் அல்ல. அமைதியை விரும்புபவன்" என்றும் மிகத்தெளிவாகப் பேசினார்.

புத்திசாலிகள் இந்த அடக்குமுறையைக் கண்டு வெறுத்துக் கவலைப்பட்டார்கள். சார்லி அவர்களின் ஆதரவைப் பெற்றார். ஆனால், அமெரிக்கர் அல்லாதவர்களின் நடவடிக்கை கூட்டுக்குழு - அதிகாரத்திலும், வெறித்தனத்திலும் வேகமாக வளர்ந்து கொண்டிருந்தது. சாதாரண இடதுசாரி இயக்கங்களோடு யாரேனும் தொடர்பு வைத்திருந்தாலோ அல்லது அவர்களுக்கு ஆதரவு காட்டினாலோ, அவர்கள் நாட்டின் துரோகிகளாக முத்திரை குத்தப்படும் அபாயத்தில் இருந்தனர்.

'கேதலிக் வோர் வெட்ரன்ஸ்'கள், சார்லியை நாடு கடத்த வேண்டும் என்று கோரினர். ஒரு சந்தர்ப்பத்தில் FBI (Federal Bureau of Investigation) சார்லியை நான்கு மணி நேரங்கள் குறுக்குவிசாரணை செய்தது. அவர்கள் சார்லியின் சொந்த வாழ்க்கையைப் பற்றியும், பிறந்த இனம் பற்றியும் கேள்விகள் கேட்டனர். எல்லாக் கம்யூனிஸ்ட்களையும் வெறுப்பதாகக் கூறத் தைரியமாக அவர் மறுத்துவிட்டார்.

இந்த அடக்குமுறை சூழ்நிலையில் அவர், தன் புதிய படத்துக்கான வேலைகளைத் துவங்கினார். ஸ்ரூடியோவை வேலையில்லாமல் பூட்டிவைப்பதில் அவருக்கு இலாபமில்லை.

அந்தப் புதிய படம் 'லைம் லைட்' - வயதான இசை அரங்குக் கலைஞனையும், அவன் உதவியுடன் வெற்றிபெறும் இளம் பெண்ணையும் பற்றிய கதை. சார்லி சிறுவனாக இருந்தபோது அறிந்திருந்த லண்டன் நகரத்து நினைவுகளையும், மேடை வாழ்வையும் இந்தப்படத்தில் சேர்த்துக்கொண்டார். அது உணர்ச்சிமயமானதாக இருந்தது. ஆனால், பழைய இசையரங்குகளின் நகைச்சுவைகளும், உருக்கங்களும் அவருடைய நிறையப் படங்களில் இடம்பெற்றிருக்கின்றன.

சிட்னியும், ஊனாவும் சார்லிக்கு உதவினர். 1946 இல் சார்லிக்கும் ஊனாவிற்கும் மைக்கேல் என்ற இரண்டாவது குழந்தை பிறந்தான். பிறகு 1949 இல் ஜோஸபியனும், 1951 இல் விக்டோறியாவும் பிறந்தார்கள்.

கம்யூனிஸ்ட்களுக்கு எதிரான அமெரிக்காவின் உணர்ச்சிகள் ஒரு புதிய, இன்னும் பைத்தியக்காரத்தனமான நிலையை எட்டியது. 1950 இல் ஜோசப் மெகார்த்தே என்ற செனட்டர், அரசுத்துறைகளில் 200 கம்யூனிஸ்ட்கள் இருப்பதாக பிரகடனம் செய்தார். இந்தப் புதிய வெறி அலையில், எவரும் அமெரிக்காவுக்கு எதிராகச் செயற்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, நீதிமன்றத்தில் மெகார்த்தேயாலும், கூட்டாளிகளாலும் குறுக்கு விசாரணை செய்யப்படவும், ஏசப்படவும் வாய்ப்பிருந்தது. பயம் அதிகரித்தது. மதிப்பான, புத்திசாலியான திறமைசாலிகளெல்லாம் தங்களுடைய வேலைகளை இழந்ததோடல்லாமல், நற்பெயரையும் இழந்தார்கள். எங்கும் பொய்கள் மலிந்திருந்தன. தங்களுடைய பழைய பஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள, மக்கள் மெகார்த்தேயைப் பயன்படுத்திக் கொண்டார்கள். அல்லது ஒன்றுமறியாதவர்களை குற்றவாளியாக்குவதன்மூலம் தங்களைக் காப்பாற்றிக்கொண்டார்கள்.

முக்கியமாக ஹொலிவூட்டில் பலர் இதற்குப் பலியாகக்கூடிய நிலையில் இருந்தனர். தைரியமான சில ஆண்களும், பெண்களும் இந்தப் பைத்தியக்காரத்தனத்தை எதிர்த்து நின்றார்கள். ஆனால், பலர் எல்லாவற்றையும் இழந்ததோடு - எதிர்காலத்தில் திரைப்படத் துறையில் மீண்டும் வேலை கிடைக்கும் வாய்ப்பினையும் தொலைத்து நின்றார்கள்.

'லைம் லைட்' பூர்த்தியாயிற்று. முதல் காட்சிக்காக அதை லண்டனுக்கு எடுத்துச் செல்லத் தீர்மானித்தார் சார்லி.

இரண்டு நாட்கள் கப்பல் பயணத்துக்குப் பிறகு ஓர் அறிவிப்பு வந்தது. அமெரிக்காவின் அட்டர்னி ஜெனரல், சாப்ளின் மறுபடியும் அமெரிக்கா திரும்பத் தடைவிதித்திருந்தார். சார்லி நாடு கடத்தப்பட்டுவிட்டார்.

(தொடரும்)

# கொலம்பிய இறுதி நிமிடங்கள் விடியோவில்!



கடந்த பெப்ரவரி முதலாம் திகதி வானில் வெடித்துச் சிதறிய நாசாவின் கொலம்பியா விண்கலத்தின் கடைசி நிமிடங்களைப் படம்பிடித்த வீடியோ நாடா மீட்கப்பட்டுள்ளது. 13 நிமிடம் ஓடக்கூடிய இந்த விடியோ நாடாவில் இறந்த விண்வெளி வீரர்களின் இறுதி நிமிட நடவடிக்கைகள், உரையாடல்கள் என்பன பதிவாகியுள்ளது.



30 நிமிடங்களில் விண்கலத்தைத் தரையிறக்குவதற்கான ஆயத்த நடவடிக்கையில் விண்வெளிவீரர்கள் ஈடுபடுவது அந்த நாடாவில் பதிவாகியுள்ளது. இந்த விடியோநாடா இறந்த வீரர்களின் உறவினர்களுக்குப் போட்டுக் காண்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விடியோநாடா குறித்துக் கருத்துத் தெரிவித்த நாஸா நிர்வாகப்பணிப்பாளர் சீன் ஒ -கீவ் இது மிக உணர்ச்சிகரமான கட்டம். ஏனெனில் எமக்குத் தெரியும், இறுதியில் அவர்களுக்கு நடந்த அவலம். ஆனால், விடியோவில் அவர்கள் தமக்கு நடக்கப்போவதை அறியாது மகிழ்வுடன் நடமாடுவது எம்நெஞ்சை நெருடவே செய்கின்றது என்கிறார்.

# பனிச் சிறுத்தைகளைக் கடத்திய சேர்க்கஸ் கம்பனி




அரிய விலங்கினமான பனிச்சிறுத்தைகள் - ரஷ்ய சேர்க்கஸ் நிறுவனம் ஒன்றிடமிருந்து, ஜேர்மனிய இயற்கைப் பாதுகாப்பு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த இரு பனிச்சிறுத்தைகளும் தற்போது புனர்வாழ்வு மையத்தில் வைக்கப்பட்டுள்ளன. விரைவில் இவை காட்டுக்குள் கொண்டுசென்று விடப்படவுள்ளன.

ரஷ்யாவின் நடமாடும் சேர்க்கஸ் நிறுவனங்கள் இத்தகைய அரிய விலங்கினங்களைக் கடத்துவதிலும், விற்பதிலும் இரகசியமாக ஈடுபட்டுவருவது இதன் மூலம் நிரூபணமாகியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த அரிய சிறுத்தைகள், சிங்கங்கள், புலிகள் வைக்கப்பட்ட கூடுகளுக்குப் பின்பாக மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக இதைக் கைப்பற்றிய அதிகாரிகள் தெரிவித்தனர். ஒரு பனிச்சிறுத்தை - 22 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு, அதன் தோலுக்காக விற்கப்படுகிறதாம். இமாலய மலைப்பகுதியில் மட்டும் இந்தப் பனிச்சிறுத்தைகள் வாழ்கின்றன.

# இப்படியும் ஒரு எதிர்ப்பு!








ஸ்பெயினுக்கு அண்மையில் எண்ணெய் தாங்கிக் கப்பல் ஒன்று சமீபத்தில் விபத்துக்குள்ளாகியது. இதில் கொண்டுசெல்லப்பட்ட மசகு எண்ணெய் கடலில்பரவி, கடல்வாழ் உயிரினங்களைப் பெருமளவில் அழித்ததுடன், சுற்றுச்சூழலுக்குப் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியது.

இந்த எண்ணெய்ப் படலம் 3 ஆயிரம் கிலோ மீற்றர்வரை கடலில் பரவியிருந்தது. எண்ணெய்ப் படலத்தை அகற்றி, சுற்றுச்சூழலைப் பாதுகாக்க ஸ்பெயின் அரசு தவறிவிட்டதாகக் குற்றஞ்சாட்டி - எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று ஸ்பெயின் மக்களால் நடத்தப்பட்டது.

இதில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். அவர்களில் சிலர் சுற்றுச்சூழல் பாதிப்பை வெளிப்படுத்தும் வகையில், தம்மீது மசகு எண்ணெயை ஊற்றித் தம்மை "அலங்கரித்திருப்பதைப்" படங்களில் காணலாம்.

# திரை விமர்சனம்

## யுனிவர்சிட்டி




உண்மையில் இத்திரைப்படத்தின் கணித சமன்பாடு, துள்ளாத மனமும் துள்ளும்+காதல் கோட்டை= யுனிவர்சிட்டி. ஜீவன் என்ற புதுமுக நடிகர் பார்ப்பதற்கு ஏ.ஆர்.ரஹ்மான் போலுள்ளார். மன உறுதியற்ற ஒரு மாணவராகப் பாத்திரமேற்றுள்ளார். தற்கொலை செய்யப்போகும் கஜாலா என்ற பெண்ணுடன் தற்செயலாக இவருக்குத் தொலைபேசித் தொடர்பு கிடைக்கிறது. அவள் ஒரு பொப் பாடகி. தொலைபேசித் தொடர்பு கிடைத்த அந்தக் கணமே தன்னுடன் உரையாடியது யார் என அறியாது, பார்க்காது காதல்கொள்கிறாள். தற்கொலை முயற்சியையும் கைவிட்டுவிடுகிறாள். இறுதியில் இருவரும் ஒருவரை ஒருவர் சந்திக்கத் தீர்மானிக்கின்றனர், சந்திக்கின்றனர். சந்திப்பு சச்சரவில் முடிகிறது. இதனால் ஜீவன் - தான் யார் என்பதை அவளிடம் சொல்லாமலேயே விட்டுவிடுகிறான். திரைப்படத்தின் இறுதியில் கஜாலா அவன் யார் என்பதைப் பற்றி அறிந்துகொள்கிறாள், படமும் முடிகிறது. மனதில் நிற்பதாகப் பாடல்கள் இல்லை. விசேஷங்களற்ற, சாதாரண திரைப்படம். ஆனால், விதிவிலக்கு விவேக் மட்டுமே. விவேக்கின் பாபா பாணியிலான அக்ஷன்களும், நூலகக்காட்சியும் நகைச்சுவையின் உச்சம்.

அழகை மட்டும் கதாநாயகி கொண்டிருந்தால் போதும், நடிப்பாற்றல் தேவையில்லை என்ற முடிவோடுதான் கதாநாயகித் தெரிவு நடந்துள்ளதுபோல் உள்ளது. இதைவிட பெயர், ஊர், வயது என்று எதுவும் தெரியாது, தற்கொலையில் இருந்து மீட்டதற்காக ஒருவரை கற்பனையில் காதலிக்கும் கதாநாயகிப் பாத்திரமும் பொருத்தமில்லாது இருக்கின்றது.

படத்தின் கிளைமாக்ஸ் காட்சியும், விவேக்கின் நகைச்சுவையுமே யுனிவர்சிட்டியின் இரு தூண்கள். இவை இல்லாதுவிடின் தரைமட்டம்தான். மொத்தத்தில் கொட்டாவி அதிகம் வரக்கூடிய படம்.

- துஷி -

# ஓய்வு பெற்றது




## கலிலியோ!


வியாழ கிரகத்தை ஆய்வுசெய்யவென 1989 இல் அனுப்பப்பட்ட கலிலியோ விண்கலத்தின் பணிகள் யாவும் முடிவடைந்துவிட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வை மேற்கொள்ள அமைக்கப்பட்டிருந்த 300 பேர் கொண்ட ஆய்வுக்குழுவும் கலைக்கப்பட்டு விட்டது. கலிலியோ தனது கடைசித் தகவலை கடந்த 28 ஆம் திகதி பூமிக்கு அனுப்பியதோடு, அது 'ஓய்வு'பெற்றுள்ளது.

கலிலியோ - வியாழக்கிரகம் தொடர்பான படங்கள், அதன் நிலவமைப்புத் தொடர்பான விபரங்கள் என்பவற்றைச் சேகரித்து கடந்த 10 ஆண்டுகளாகப் பூமிக்கு அனுப்பிவந்தது குறிப்பிடத்தக்கது. எமது திட்டம் முடிவுக்கு வந்துவிட்டது. கலிலியோவின் பணிகளை மறக்கமுடியாது எனக் கலிலியோ திட்ட முகாமையாளர் திலிக் எய்லன் கூறுகிறார். ஓய்வுபெற்றவருக்கான பணிநலப் பாராட்டு இது!

# வாரம் ஒரு யோகாசனம்

## 06. தனுராசனம்

குப்புறப்படுத்துக்கொண்டு, கால்களை மேல்நோக்கி வளைத்து, இருகைகளையும் முதுகுப்பக்கம் கொண்டுசென்று, இருகைகளாலும் கணுக்கால்களைப் பிடித்துக்கொள்ளவும். பின்பு வயிற்றுப் பகுதி - தரையில் பதிந்திருக்க, மார்பை மேல் நோக்கி எழுப்பவும். முகத்தைச் சற்று உயரத்தூக்கி, பார்வையை மேல் நோக்கிச் செலுத்தவேண்டும்.



### தனுராசனத்தின் பயன்கள்

இவ்வாசனத்தைச் செய்வதனால் உடல் வலிமைபெறும், செழிப்படையும், எலும்புகள் திடப்படும், வயிற்றிலுள்ள வாயு வெளியேறும், சடராக்னி வளரும்.

கற்றுத்தருபவர்
**மா.மகாநேசன்** (கரவெட்டி)

# தன்னம்பிக்கையோடு குழந்தையை வளர்த்தல்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

தாய் பிள்ளைக்குப் பால் கொடுத்துக்கொண்டிருக்கும்போது வீட்டுக்கு யாராவது வந்தால், சிலர் பிள்ளைக்குப் பால் கொடுப்பதை நிறுத்திவிட்டு வந்தவருடன் கதைத்துக் கொண்டிருப்பார். அது பிழை. வந்தவரை இருக்கும்படி கூறிவிட்டு பிள்ளைக்குப் பால் கொடுத்து முடிக்கவேண்டும். இல்லையேல் பிள்ளையின் மனதில் தாக்கம் வரலாம்.

வேலைக்குச் செல்லும் பெண்கள் - தமது பிள்கைளை மற்றவர்களிடம் கொடுத்துவிட்டுச் செல்வர். சிலர் வெளிநாடு செல்வர். தாயைப்போன்று அன்பு, அரவணைப்பைக் கொடுக்கக்கூடிய ஒரு பெண்ணையே ஒரு வயதுவரை பார்த்துக்கொள்ள நியமிக்க வேண்டும். ஒரு பிள்ளையின் நிறம், உயரம் போன்றவை பரம்பரையாய் வரலாம். ஆனால் பிள்ளையின் குணம் - விரைவாகக் கோபம் வரும் ஒருவரா? இல்லையா போன்ற குணங்கள் வளரும் சூழலாலேயே ஏற்படுகின்றது. அப்பா கோபக்காரனானால் பிள்ளையும் கோபக்காரனாக இருந்தால் அது பரம்பரையால் வந்ததல்ல. வாழும் சூழலாலேயே ஏற்படுகின்றது. நாம் சண்டைபிடித்தே பிரச்சினைகளைத் தீர்ப்பது என்ற சூழல் - வீட்டில் எந்நேரமும் இருந்தால், இதைப்பார்க்கும் பிள்ளையும் பிரச்சினைகளை அப்படியே சண்டைபிடித்தே தீர்க்கப்பழகும்.

ஆகவே- சமுதாயத்துக்கும், எமக்கும் பிரயோசனமான பிள்ளையாக எமது பிள்ளை இருக்கவேண்டுமானால், அதற்கு அன்பு பாராட்டுதல், மதிப்புணர்வு, வரவேற்பு போன்ற சூழலைக்கொடுத்து, நல்ல மனவளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். குழந்தை இந்த வயதில் அன்பை, பாதுகாப்பை உணர்வதால், உடுப்பு உடுத்தும் போது, கழுவும்போது - அமைதியாக - கடுமையாக இல்லாது செய்தல் வேண்டும்.

குழந்தை பிறந்து இரண்டு வயதுக்கும் மூன்று வயதுக்கும் இடையில் - சிறிது சிறிதாகப் பிள்ளை நடக்கத் தொடங்கும். அதிகமாகக் கதைக்கத் தொடங்கும். உலகை ஆராய்ச்சி செய்யத் தொடங்கும். இந்த ஆய்வைத் தனது கை, கால்களைப் பாவித்தே செய்யத்தொடங்கும். இதனால் மற்றவர்களுக்குப் பயமும், ஏக்கமும் ஏற்படத்தொடங்கும். அதனால், வீட்டில் பெரியவர்கள் அப்பிள்ளையை அங்கும் இங்கும் ஓடாது தடுத்துவைத்து, ஒரேயிடத்திலே உட்காரவைப்பர். இதைவிடுத்துப் பிள்ளை ஏறயிறங்க, ஓட



அனுபவிக்க இடங்கொடுக்க வேண்டும். பிள்ளைக்கு இயற்கையாக வரும் குணத்தைத் தடுக்காது, நாம் ஓரளவு பின்னாலே நின்று கைகொடுத்து உதவவேண்டும். பிள்ளைகள் படித்து அறிவில் முதிர்வது ஒன்று. அதேபோன்று மனதில், சரீரத்தில் முதிர்வது மற்றொன்று. குழந்தை தானாகச் செயற்பட ஆரம்பிக்கும்போது கைகொடுத்து உதவுதல் வேண்டும். எந்தநேரமும் - செய்யவேண்டாம், ஏற வேண்டாம், தொட வேண்டாம், ஓட வேண்டாம் என்றே கூறிக்கொண்டிருந்தால் அதற்குத் தன்னம்பிக்கை குறைந்து போய்விடும். என்னால் முடியாது என்றே எப்போதும் சிந்திக்கும். ஆகவே, என்னால் முடியும் என்று சிந்திக்கப் பழக்குதல் வேண்டும். வாழ்வின் பிற்காலத்தில் ஆபத்துக்களுக்கு முகம்கொடுக்க நேரிடலாம். சிறுவயதில் தன்னம்பிக்கை வளராவிடில், பிற்காலத்தில் வாழ்வில் முகங்கொடுக்க முடியாமல் தோல்வியடைவர். அளவுக்கதிகமாக, பிள்ளைக்கு வேண்டாம் வேண்டாம் என்று கூறினால், அளவுக்கதிகமாகப் பிள்ளையைப் பாதுகாக்கிறோம். அளவோடு வேண்டாம் என்று கூறினால், அளவோடு பாதுகாக்கிறோம். ஒரு பிள்ளையிடம் உங்கள் பெயர் என்ன என்று கேட்டபோது "ஜோன் வேண்டாம்" என்று பதில் கூறியது. வீட்டில் எந்நேரமும் ஜோன் செய்யாதே என்ற பொருளில் கூறியதால் தனது பெயரே அப்படி என்று பிள்ளை எண்ணிவிட்டது.

இந்த வயதில் பிள்ளை அதிகமாக விளையாட விரும்பும். ஆரம்பத்தில் இரு பிள்ளைகளை அருகருகே விட்டால், இரண்டும் விளையாடும், ஆனால் தனித்தனியாகவே விளையாடும். பின்பு மற்றவருடன் சேர்ந்து விளையாடத் தொடங்கும். சிறு பிள்ளைகளுக்கு விளையாட்டு மிகவும் முக்கியமானது என்பதைப் பெற்றோர்கள் உணரவேண்டும். பிள்ளை விளையாட்டின் மூலம் பல விடயங்களை அறியத்தொடங்குகிறது. சூழலை, மூலப் பொருட்களை எடுத்து, தனக்கு ஏற்றவிதத்தில் அமைக்கப் பழகும். களிமண், கிளே போன்றவற்றைப் பயன்படுத்தி உரல், உலக்கை, வீடு, அம்மி, குழவி, மிருகங்கள் போன்ற பலவற்றை அமைக்கப்பழகும். பிள்ளை மணலில் வீடு கட்டும். இவற்றைக் கண்டதும் - பெற்றோர் மண் விளையாடாதே, தண்ணி விளையாடாதே என்று தடுத்து விடுவர். அளவுக்கு அதிகமாக விளையாடவிடாது, அளவோடு விளையாட விடுவது நன்று. உருவங்களை மாற்றி விளையாடக்கூடிய பில்டிங் பொக்ஸ், கிளே, களிமண் போன்றவற்றை விளையாடக் கொடுக்கவேண்டும். கடையில் இருக்கும் விளையாட்டுப்பொருட்கள் மட்டுமல்ல, எமது நாட்டில் செய்த சிறு மரவண்டில், கழற்றிப் பூட்டக்கூடிய விளையாட்டுப் பொருட்களே நன்று. எலக்ரோனிக் பொருட்களை வாங்கிக்கொடுக்கிறோம். அது அங்கும் இங்கும் ஓடும் அவ்வளவுதான். பிள்ளை அனுபவத்தைப்பெற வேறு ஒன்றும் இருப்பதில்லை.

- எஸ்.ஜே. யோகராஜா

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

கூழும் குடியும் ஒருங்குஇழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு.
- திருக்குறள்.

# நமது நோக்கு

## எதிர்பார்க்கப்பட்டதே...!

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ண அண்மையில் வெளியிட்ட புள்ளிவிபரங்களின்படி - 60,500 படையினர் இதுவரை தமது கடமையை விட்டுத் தப்பியோடியிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இதிலும் - கடந்த ஆண்டே வரலாற்றில் அதிக தடவையாக, 7,393 படையினர் தப்பியோடியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்படி - யுத்தம் தீவிரமடைந்த காலப்பகுதிகளோடு, அமைதிக் காலத்தில் கூட இராணுவத்தை விட்டு விலகுபவர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்கதாக இருப்பது - தென்னிலங்கையில் நிலவும் போர் பற்றிய உணர்வலைகளை வெளிப்படுத்துவதாக உள்ளது.

அதேவேளை - அண்மையில் விசேட அதிரடிப் படைக்கு நடந்த ஆட்சேர்ப்பில் கலந்து கொள்ள வந்திருந்த சிங்கள இளைஞர்கள் பலரும் - வேறு வேலைகள் எதுவும் கிடைக்கவில்லை என்ற காரணத்தினாலேயே, தாம் அதிரடிப்படையில் இணைய வேண்டி வந்ததாகவும்,

- நாட்டுப்பற்று, தேசியப்பற்று என்ற விடயங்கள் எல்லாம் இரண்டாம் பட்சமே என்றும் கூறியுள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் நடாத்தப்பட்ட இராணுவத்துக்கான பாரிய ஆட்சேர்ப்பு முயற்சிகள் இரண்டிலும் தோல்வியே கிடைத்துள்ள நிலையில்,

- ஓரளவுக்கேனும் அதிரடிப்படையில் சேருவோர் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் திருப்திகரமாக உள்ளதென- படைவட்டாரங்கள் ஆசுவாசப்படுகையில்தான் - இத்தகைய கருத்துக்களும் வெளிவந்துள்ளன.

இது இப்படியிருக்க - இராணுவத்தைவிட்டு ஓடுவோர் - சில மாதங்களாகப் பணியாற்றிவிட்டு, கிடைக்கும் 40 ஆயிரம், 50 ஆயிரம் ரூபாவுடன் ஊர் திரும்பினால், அப்பணமும் செலவழியும் வரை அவர்கள் பணிக்குத் திரும்புவதில்லை. அது செலவழிந்ததுமே மீண்டும் இராணுவத்தில் இணைவது பற்றிய யோசனை அவர்களுக்கு வரும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ண 'கவலையோடு' குறிப்பிடுகின்றார்.

இதனடிப்படையில் பார்த்தால் - படைகளில் உள்ள அல்லது புதிதாகச் சேரவிரும்புவோரின் உண்மையான நோக்கம் - தென்னிலங்கையின் அரசியல்வாதிகள் கூறுவது போல, அல்லது பௌத்த சிங்களப் பேரினவாதிகள் குரலெழுப்புவது போல -

தாய்நாட்டின் மீதான பற்றோ அல்லது அரசாங்கத்தின் மீதான விசுவாசமோ அல்லது இன்னும் உயரிய 'விழுமியங்களோ' கிடையாதென்பதை - சிங்கள இளைஞர்களும், இராணுவப் பேச்சாளருமே வெளிப்படையாக, பகிரங்கமாகக் கூறுகின்றனர்.

உண்மையில் படையினரையும், சிங்கள இளைஞர்களையும் - இவ்வாறு வர்த்தக நோக்கத்திற்கான அல்லது ஆதாயந்தரும் சிந்தனையாளர்களாக மாற்றியமைத்த 'பெருமை' தொடர்ந்து வந்த சிங்கள ஆட்சியாளர்களையும் படைத்தளபதிகளையுமே சார வேண்டியதாகும்.

தமிழ்மக்களுக்கெதிரான இனவெறி யுத்தத்தை அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விட்டதிலிருந்து - இலங்கைப் படையினர் - சீர்மையும், நெறியும் மிக்க இராணுவமாகக் கருதப்படும் தகுதியை இழந்துவிட்டிருந்தனர்.

சொந்த நாட்டு மக்களையே கொன்று குவிக்கும் மிலேச்சத்தனம் மிக்க அரச இயந்திரமாக மாறிவிட்ட அந்த அமைப்பிற்கு - தீவிரமடைந்த யுத்தம் பெற்றுத்தந்த 'தரகு இலாபம்' - அதனை மேலும் சிதைவடையச் செய்வதாகவே அமைந்தது.

போரினை வழிநடத்திய அரசியல்வாதிகளும், படைத்தளபதிகளும் - அரசியல் இலக்குகளுக்காகவும், இனவெறியைத் தீர்ப்பதற்காகவும்,

அடிப்பது இலாபம் என கொமிஷன்களுக்காகவும் - இராணுவத்தைப் பயன்படுத்த முனையவே - அதன் தரமும் ஒழுங்கமைப்பும் இன்னும் கீழ்நிலைக்குச் செல்லவே வழிவகுக்கப்பட்டது.

இத்தகைய நிலையில் - நாட்டுப்பற்றும், தேசியப்பற்றும் மிக்க - அர்ப்பணிப்பும், விசுவாசமும் கொண்ட இராணுவம் என்பது கனவாகிப் போனதே விளைவானது.

இதனால் - படைத்தரப்பிலிருந்து, கிட்டத்தட்ட அரைப்பங்கிற்குச் சமமானோர் தப்பியோடவும் - வேறு வேலையின்றியே படையில் சேரவுமான சிந்தனை, சிங்கள இளைஞர்களிடையே வலுப்பெற்றதில் வியப்பென்ன இருக்க முடியும்.

யதார்த்தம் இவ்வாறிருக்க - மீண்டும் போரெனவும், முழுநாடும் நமதே என்றும், சமாதான வழியில் பிரச்சினையைத் தீர்ப்பதா எனக் கூக்குரலிடவும் முனையும் தென்னிலங்கை அரசியல் சக்திகளையும், பௌத்த சிங்களப் பேரினவாத சக்திகளையும் - எண்ணும்போது நகைக்கவே தோன்றுகின்றது.

# சமபலம் பேணலுக்கான முக்கிய தேவை

# புரிந்துணர்வு ஒப்பந்த மீள் வரைபே!

(நேற்றைய தொடர்ச்சி)

இக்கரையோரப் பிரதேசங்களில் தீவகம், காரைநகர், காங்கேசன்துறை மற்றும் தலைமன்னார் உள்ளிட்ட சில பகுதிகள் மற்றும் திருமலை மாவட்டத்தின் துறைமுகம் உள்ளிட்ட சில பகுதிகள் ஆகியன தவிர்ந்த ஏனைய 75 விழுக்காடு கரையோர மற்றும் கடற்பரப்புக்கள் கடற்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழே இருக்கின்றன அல்லது அவர்களால் உடனடியாக அணுகப்படக்கூடியவையாக இருக்கின்றன.



இவ்வகையில் பார்த்தால், இலங்கையின் 21,700 சதுரக் கிலோமீற்றர் கடற்பரப்பு மற்றும் அதன் பிரத்தியேகப் பொருளாதார வலயம் (Exclusive Economic Zone-EEZ) என வரையறுக்கப்பட்ட 465,800 சதுரக் கிலோமீற்றர் கடற்பரப்பு ஆகியவற்றின் பெரும்பகுதி கடற்புலிகளின் ஆளுமைக்குள்ளேயே இருந்துவந்தது. இந்தநிலை தொடர்ந்து பேணப்படுவது சமபலம் பேணல் என்பதின் ஒரு அங்கமாகவே இருக்கிறது என்பது இன்னமும் உள்வாங்கப்படவில்லை. கண்காணிப்புக்குழுவின் உபதலைவருடனான உரையாடலில் "புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மிகப்பெரிய பலவீனம் யாதெனில் அது கடற்பரப்புக் கையாளுகை தொடர்பாக எதையுமே அது குறிப்பிடவில்லை" என அவர் தெரிவித்த கருத்தும் இதையே சுட்டிநிற்கிறது.

எதுவுமே குறிப்பிடப்படவில்லை என்பதற்காக, கண்காணிப்புக்குழு 'சும்மா' என்று இருந்துவிட முடியாது. கண்காணிப்புக் குழுவின் கடந்த ஜுலை மாதத்திய செய்தி வெளியீடொன்றில் (Ref:SLMM HQ/MED/6010), "சமபலம் பேணல் என்பது இருதரப்பிற்கும் மிகமுக்கியமான செயற்பாடு. புரிந்துணர்வு ஒப்பந்தம் உயிர்ப்புடன் இருக்க இது இன்றியமையாத நடவடிக்கை. எனவே, தத்தமது படைத்தரப்பிற்கு ஆட்களை இணைத்தல், பயிற்சி என்பன சமபலம் பேணலின் வழமையான ஒரு அங்கமே தவிர, போருக்குத் தயார்ப்படுத்தல் என்றாகாது'' எனத் தெரிவித்திருந்தது.

இந்தவகையிலே கடற்புலிகளின் - தமது கட்டுப்பாட்டுப் பகுதியிலான செயற்பாடுகளும் சமபலம் பேணலின் ஒரு அங்கமே என்பதை வெளிப்படுத்த கண்காணிப்புக்குழு ஏனோ தவறிவிட்டது.

ஆக மொத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சரத்து 4.3 கூறுவது யாதெனில், "இந்த ஒப்பந்தம் மேலதிக விடயங்களை இணைப்பதற்கோ அல்லது திருத்தம் பெறுவதற்கோ உரித்துடையது. அவ்வாறான செயற்பாடு இரு தரப்பாலும் மேற்கொள்ளப்பட்டால், அது பற்றி எழுத்து மூலம் நோர்வே முடியரசிற்கு அறியத் தரவேண்டும்" என்பதேயாகும். நடைமுறைச் சிக்கலுடையதாயினும், ஒப்பந்த மீள்வரைபு அல்லது இணைப்பு ஒன்றை மேற்கொள்வதற்கான தேவையைக் கண்காணிப்புக்குழு உணர்த்திநிற்கின்றது. அதுகூட சமபலம் பேணல் என்கிற நிலைப்பாட்டின் தெளிவை உள்ளடக்கியதாகவும், கடந்த ஒருவருடத்தைய கற்பிதங்களை உள்வாங்கியதாகவும் அது அமைவு பெறுவதே கண்காணிப்புக்குழு உருவாக்கப்பட்டதின் பலனை நாம்பெற ஏதுவாக்கும்.

கடற்புலிகளின் படையணியானது இன்றைய தேதியில், உலகிலுள்ள அதிவேகத் தாக்குதற் கலங்களில் (EFAC- Extra Fast Attack Craft) முதன்மை வகிக்கும் நவீன தயாரிப்பான சுப்பர் டோராப் படகுகளைக் கொண்டுள்ள (Super Dvora MK II) சிறீலங்காக் கடற்படைக்குச் சிம்மசொப்பனமாகி, ஆழ்கடல் வலிந்து தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஒரு படையணி. அத்தோடு, ஒரு கள நடவடிக்கைக்குத் தேவையான மரபுப்படையணி, ஆளணிகள் தரையிறக்கத்திலும் பெயர்போன ஒரு மரபுப்படையணி. குறிப்பாக அதன் குடாரப்பு - தாளையடித் தரையிறக்கம் உலகப்போரியல் வரலாற்றில் புதிய பக்கங்களை இணைத்த ஒரு நிகழ்வு. இவ்வாறான ஒரு படையணி தற்போது பொறுமை காத்து ஒதுங்கியிருப்பது இன்றைய தேதி வரையுமான புரிந்துணர்வு ஒப்பந்த நகர்விற்கு உயிரோட்டமாக அமைந்துள்ளது.

இரணைதீவுக் கடற்பரப்பில் உதவிக்கு விரைந்து வந்த கடற்புலிகளின் படகிலிருந்த ஆயுதங்கள், ஒரு கடற்புலிகளின் தாக்கு கலத்திற்குரிய ஆயுதங்களே. 23 மி.மீ கனன் துப்பாக்கி கடற்புலிகளின் கலங்களின் முன், பின் தளங்களிற்கான சுடுகலனாகும். 1983 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவ்வாயுதங்களைப் பயன்படுத்திய சிறிலங்காக் கடற்படை, இப்போது அதிகூடிய வலுவுள்ள 'ஒலிகன்' ரக சுடுகலன்களையும், வெப்பவுணர்தாக்கிப் பீரங்கிகளையும் பாவித்து வருகின்றது. நெடுந்தீவை அண்மித்த மேற்படி கடற்பரப்பு ஆயுதக் கடத்தலுக்கு எந்த வகையிலும் உகந்ததல்ல என்பது உண்மை. மன்னார் - நாச்சிக்குடாவுடனான போக்குவரத்திற்கான பாதையே அது. அதுபோன்றே இன்றைய தேதியில் 23 மி.மீ.கனன் துப்பாக்கி ஒரு விமான எதிர்ப்புத் துப்பாக்கியல்ல. 1940 களில் விமான எதிர்ப்பு நடவடிக்கைகளில் இதன் பயன்பாடு பெறப்பட்டதால் அப்பெயர் அப்படியே நிலைக்கலாயிற்று.

**- நக்கீரன்.**

# வேறு வேலைகள் கிடைக்காததால் அதிரடிப்படையில் இணைந்தோம்!

## ஆட்சேர்ப்புக்கு வந்த இளைஞர்கள் கருத்து

புரிந்துணர்வு உடன்பாடு அமுலுக்கு வந்த பின்னர், அரசாங்கம் மேற்கொண்ட இரண்டு இராணுவ ஆட்சேர்ப்பு முயற்சிகளும் பலத்த தோல்வியில் முடிந்துள்ளதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

முதலாவது ஆட்சேர்ப்புக் கடந்தவருடம் மே 8 ஆம் திகதிக்கும் ஜுன் 30 ஆம் திகதிக்கும் இடையில் நடத்தப்பட்டது. இதன்போது ஆகக்குறைந்த கல்வித்தகைமை க.பொ.த. சாதாரணதரத்தில் 3 பாடங்கள் சித்தி என அறிவிக்கப்பட்டது.

ஆனால், இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் 616 பேரே இராணுவத்திற்சேர விண்ணப்பித்தனர்.

இதையடுத்து, இரண்டாவது ஆட்சேர்ப்பு நடவடிக்கை ஒக்ரோபர் 16 ஆம் திகதி முதல் நவம்பர் 30 ஆம் திகதி வரை நடத்தப்பட்டது. முதலாவது ஆட்சேர்ப்பில் போதிய படையினர் இணைந்து கொள்ளாததால், 8 ஆம் தரச் சித்தியுடன் இராணுவத்தில் சேரலாம் என அறிவிக்கப்பட்டது.

இதன்போது 1886 பேர் மட்டும் இராணுவத்திற்சேர முன்வந்தனர். காலி, கண்டி, அநுராதபுர மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்களே அதிகளவில் இராணுவத்திற்சேர முன்வந்தனர்.

இராணுவத்தில் ஆட்சேர்ப்பதற்கான கல்வித்தகைமை குறைக்கப்பட்டமை குறித்துப் படையதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர். குறைந்த கல்வித்தகைமையுடன் படைகளுக்கு ஆட்களைச் சேர்ப்பதால், படைகளிலிருந்து தப்பி ஓடுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும், குற்றச்செயல்கள் அதிகமாக இடம்பெறும் என்றும் அப்படையதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த இரண்டு வாரங்களில் பொலிஸ் விசேட அதிரடிப்படைக்கு ஆட்சேர்ப்பு நடத்தப்பட்டபோது, பெருமளவான இளைஞர்கள் அதில் இணைவதற்கு விண்ணப்பித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

வேறு வேலைகள் கிடைக்காததால் தாம் விசேட அதிரடிப் படையில் இணைந்துகொள்ளலாம் எனத் தீர்மானித்ததாகக் கூறும் அநேகமான இளைஞர்கள், தமக்கு வேலையே முக்கியம் என்றும் - நாட்டுப்பற்று, தேசியம் என்பன பற்றிக் கவலையில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இராணுவத்தில் இருப்பதைவிட விசேட அதிரடிப்படையிலிருப்பது சமூகத்தில் கௌரவத்தை வெளிப்படுத்துவதாகவும் அநேகமானோர் கருத்துவெளியிட்டுள்ளனர்.

விசேட அதிரடிப்படைக்கான ஆட்சேர்ப்பின்போது கான்ஸ்டபிள் தரத்துக்கு 17 ஆயிரம் விண்ணப்பங்களும், சப் - இன்ஸ்பெக்டர் பதவியில் இணைய 8 ஆயிரம் விண்ணப்பங்களும் கிடைத்ததாக விசேட அதிரடிப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)

# அரசுக்கு எதிரான கூட்டத்தை நடத்துவதற்கு இடம் தேடும் பொதுஜன ஐக்கிய முன்னணி

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு எதிராக பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி என்பன இணைந்து மேற்கொள்ளவுள்ள மிகப்பெரிய பேரணி மற்றும் எதிர்ப்புக் கூட்டத்தை நடத்துவதில் சிக்கல்கள் தோன்றியிருப்பதாகத் தெரியவருகிறது.


பத்து லட்சம் மக்களைத் திரட்டிப் பேரணியை நடத்தவுள்ளதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணி தெரிவித்திருந்தது. இதைவிட ஐந்து இலட்சம் ஜே.வி.பியினரும் இந்தப் பேரணியில் கலந்துகொள்வார்கள் என்று ஏற்பாட்டாளர்கள் கருத்து வெளியிட்டிருந்தனர்.

ஆனால், பேரணியைத் தொடர்ந்து அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள், விலைவாசியுயர்வு என்பவற்றைக் கண்டித்து நடத்தப்படவுள்ள எதிர்ப்புக் கூட்டத்தை, நடத்துவதற்கான இடத்தைத் தெரிவுசெய்வதில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணி - மாநகரசபை மைதானத்திலேயே இந்தக்கூட்டத்தை நடத்தத் திட்டமிட்டிருந்தது. ஆனால், கொழும்பு மாநகரசபை இதற்கான அனுமதியை இதுவரை வழங்காததால் ஏற்பாட்டாளர்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

# ஒற்றையாட்சியின்கீழ் சமஷ்டிமுறை; ஸ்பெய்ன் உலகிற்குத் தந்த அறிமுகம்!

சென்றவாரத் தொடரிலே தென்னாபிரிக்கச் சமஷ்டி முறைமையைப் பற்றி ஆராய்ந்து நிறைவுசெய்திருந்தோம். இவ்வாரம்முதல் ஸ்பெ



ஸ்பெய்ன் நாட்டுத் தேசியக்கொடி

ய்ன் நாட்டினது அரசியற்திட்ட முறைமையைத் தொடர்ந்து பார்ப்போம்.

ஸ்பெய்ன் நாட்டினது அரசியற்திட்ட முறைமையானது சமஷ்டி முறைமையில் அமைந்தவொன்று என அறுதியிட்டுக் கூறமுடியாத போதும், அந்நாட்டின் அதிகாரப் பகிர்வு முறைமை மிகவும் பாராட்டுதலுக்குரியதாக அரசியற்திட்டவியலாளர்களால் கருதப்படுகின்றது.

இந்தவகையில் ஸ்பெய்ன் ஆட்சி முறைமையானது சமஷ்டியுடன் இணைந்தவகையில் - கூடியளவான அதிகாரப் பகிர்வுகளை (federalism with asymmetric regional devalution ) பிராந்திய அடிப்படையில் கொண்டமைந்ததாகக் காணப்படுகிறது.

தென்னாபிரிக்கச் சமஷ்டி முறை-முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான உதாரண முறையென (formula model) இன்று ஆய்வாளர்களால் போற்றப்படும் அளவிற்கு ஸ்பெயின் நாட்டின் அரசியற்திட்டம் போற்றப்படுவதில்லை இதற்கான முக்கிய காரணம் - அது தனது அரசியற்திட்டத்தில் 'சமஷ்டிமுறையிலமைந்த'' அரசியற்திட்டம் என்று வரையறுத்துக்கொள்ளாதபடியால் ஸ்பெய்ன் அரசியற்திட்டம் சமஷ்டித் தத்துவங்களைக் கோட்பாட்டு ரீதியாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால், ஸ்பெய்ன் அரசியற்

## சுயநிர்ணயம் ஒரு பார்வை பகுதி - 23

திட்டம் ஒற்றையாட்சியின் அடிப்படையிலேயே - பிராந்தியங்களுக்குக் கூடுதலான அதிகாரங்களை அளித்திருக்கின்றது என்று கருதுவதற்கு இடமுண்டு. அவ்வாறு கருதுவதற்குக் காரணம், சமஷ்டித் தத்துவத்தினை ஏற்றுக்கொள்ளாத எந்தவொரு அதிகாரப்பகிர்வும், அந்த அதிகாரத்தை மத்திய அரசாங்கம் மீளப்பெற்றுக்கொள்ளும் உரிமையையும், சாத்தியத்தினையும் கொண்டிருக்கின்றது.

இங்கு ஒற்றையாட்சிக்கும், சமஷ்டியாட்சிக்கும் இடையிலான முக்கிய வேறுபாடு - "சட்டம் இயற்றும் அதிகாரம்'' என்பதுதான். ஒற்றையாட்சியில் சட்டமியற்றும் அதிகாரம் மையத்தில் அல்லது மத்தியில்தான் காணப்படும். அவ்வதிகாரத்தினை அரசியற்திட்ட ரீதியாகப் பகிர்ந்தளித்திருப்பதுதான் ஒற்றையாட்சியில் அதிகாரப்பரவலாக்கம் என்பதாக அமையும். ஆனால், சமஷ்டிமுறையில் சமாந்தரமாகச் சட்டம் இயற்றும் அதிகாரம், இரண்டு அரசுகளுக்கும் காணப்படும். எனவே சமஷ்டித் திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட சுயாட்சியினை எந்தவொரு அரசும் திருப்பிப் பெற்றுக்கொள்ள முடியாது.

இந்தவகையில்- ஸ்பெய்ன் நாட்டின் அரசியற்திட்டத்தினை, சமஷ்டி அரசியற்திட்டம் என்று கூறிவிடமுடியாது. ஆனால், பகிர்ந்து அளிக்கப்பட்ட அதிகாரத்தின் விதம் அல்லது தன்மை அந்நாட்டில் ஏற்பட்ட பொருளாதார அபிவிருத்தி, அத்துடன் இணைந்த வருமானச் சமபங்கீடு, அந்நாட்டின் முறுகல் நிலையை அல்லது முரண்பாட்டுத் தன்மையைத் தீர்த்துக்கொண்டது எனலாம்.

ஆனால், ஸ்பெய்ன் நாட்டில் இருக்கும் சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வுடன் இணைந்ததான சமஷ்டி முறைமை காணப்படுமாயின், அது தென்னாபிரிக்க சமஷ்டித் திட்டத்திலும் பார்க்க கனதியானதும், காத்திரமானதுமான சமஷ்டி அரசியற் திட்டமாக இருக்கும் என்பது திண்ணம்.

ஸ்பெய்ன் நாட்டின் அதிகாரப் பகிர்வின் வரலாறு என்பது - எமது நாட்டின் அதிகாரப்பகிர்விற்கான எத்தனிப்புக்கள் அல்லது முயற்சிகளின் வரலாற்றுடன் ஒத்திசைவானது.

ஸ்பெய்னில் உண்மையான, விசுவாசமான அதிகாரப்பகிர்வு இடம்பெற்றது. ஆனால், எமது நாட்டில் அதற்கான, எத்தனிப்பு எதுவும் நடைபெறவில்லை. உண்மையான, விசுவாசமான அதிகாரப்பகிர்வுக்கு இங்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என்பதனை நாம் கவனத்திற் கொள்ளவேண்டும்.

### ஸ்பெய்ன் நாட்டின் சமூக வரலாற்றுப் பின்புலம்

ஸ்பெய்ன் தேசியவாதம் என்பது



*1978 இல் அரசியல் அமைப்புத்திட்ட திருத்தம் தொடர்பாக நடத்தப்பட்ட பொதுமக்கள் கருத்துக் கணிப்பின் முடிவினை அந்நாட்டரசர் சொலமன் லீ அறிவிக்கிறார்.*

ஒருமைப்பாட்டுத்தன்மை (Homogenous) கொண்டதாகக் காணப்படவில்லை. பிராந்திய ரீதியான வேறுபாடுகள் அந்நாட்டில் 19 ஆம் நூற்றாண்டிலேயே மிகவும் முனைப்புப் பெறுவதாகக் காணப்பட்டன.

இதனால், ஸ்பெய்னின் தேசியம் என்பதில்- அந்நாட்டில் 1812 ஆம் ஆண்டு வரையப்பட்ட அரசியற்திட்டத்திற்கும், 1837 ஆம் ஆண்டு வரையப்பட்ட அரசியற் திட்டத்திற்கும் இடையில் கோட்பாட்டு ரீதியில் வேறுபாடுகள் காணப்பட்டுள்ளன. அதேவேளை, தற்பொழுது ஸ்பெயினின் தேசியம் என்பது பிறிதொரு கோட்பாடாகக் காணப்படுகிறது. இவ்வாறு தேசியத்திற்கான கோட்பாட்டு மாற்றத்திற்குக் காரணம் - அந்நாட்டின் சனத்தொகைப் பரம்பல், பொருளாதார வாழ்வு, சமூக உற்பத்தி என்பன தெளிவான பிராந்திய வேறுபாடுகளைக் கொண்டமைந்து காணப்பட்டமையே ஆகும்.

இந்த அடிப்படையில் ஸ்பெயின் தேசியம், மையப்படுத்திய ஸ்பெயினின் தேசியமா? அல்லது பிராந்தியங்களின் கூட்டுமொத்தத் தேசியமா? என்ற விடய ஆய்வு - 1812 இற்கும் 1837 இற்கும் இடையில் அந்நாட்டில் வலுத்துக் காணப்பட்டது.

வேலும்மயிலும் சேந்தன்

இன்று இம்முரண்பாட்டினைக் கடந்து, ஸ்பெய்ன் நாட்டின் ஒவ்வொரு பிரஜைகளினது "இறைமையின் தேசியமாக" 1986 ஆம் ஆண்டு அரசியற்திட்டம் வரையறுத்து வைத்துள்ளது.

# உலக வரைபடத்தில் இருந்து மறைந்துவிட்ட யூகோசிலாவியா!

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

இஸ்லாமிய மதவாத ஓட்டமான் பேரரசின் அடக்குமுறைக்கு ஆளான சேர்பியர், நகரங்களைவிட்டு நீங்கி மலைப்பிரதேங்களில் குடியேறி



**சேர்பியா - மொன்ரநீக்ரோ இணைப்பரசின் சின்னம்**

வாழ்ந்தார்கள். நகரங்களில் வாழ்ந்தபோது - கைவினைப் பொருட்கள், சுரங்கவேலை மற்றும் வணிகம் முதலிய தொழில்கள் செய்து பிழைத்த சேர்பியர்கள் - புதிய சூழலில் கால்நடைவளர்த்தல், விவசாயம் போன்ற தொழில்களில் ஈடுபட்டார்கள்.

ஐரோப்பிய நாடுகளும் அவுஸ்திரியாவும் (Austria) துருக்கிக்கு எதிராக ஒட்டமான் பேரரசின் கீழ் வாழ்ந்த சேர்பியர்களது உதவியுடன், பல யுத்தங்களை நடத்தின. துருக்கி - அவுஸ்திரியா இடையில் நடந்த யுத்தத்தின்போது (1593-1605) சேர்பியர்கள் துருக்கிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார்கள். பதிலடியாகத் துருக்கி சுல்தான் சேர்பியர்களால் போற்றப்படும் சென்.சாவா (St.Sava) அவர்களது உயிரற்ற உடலைக் கொளுத்தி அழித்தார்.


சேர்பியர்கள் கேர்ஸ்கொவினா (Hersgovina) என்ற பிரதேசத்தில் இனனொரு எதிர்ப்பு மையத்தை உருவாக்கி, துருக்கிக்கு எதிராகச் செயற்பட்டார்கள்.

ஆனால், யுத்தத்தை நிறுத்தத் துருக்கியும் - அவுஸ்திரியாவும் உடன்படிக்கை செய்துகொண்ட போது சேர்பியர் தங்கள் எதிர் நடவடிக்கைகளைக் கைவிடவேண்டி நேரிட்டது. இப்படி யுத்தம், அமைதி உடன்படிக்கை மீண்டும் யுத்தம் என்ற வழமை அடுத்த பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்தது.

1683-1690 இல் துருக்கிக்கும் அவுஸ்திரியா, போலந்து மற்றும் வெனிஸ் நாடுகளுக்கும் இடையில் தொடர்ந்து பெரிய யுத்தம் நடந்தது. அவுஸ்திரியா, போலந்து மற்றும் வெனிஸ் நாடுகளுக்கு இடையிலான புனித கூட்டணியை (Holy Alliance) போப்பாண்டவரே உருவாக்கி இருந்தார். இந்தப் புனித கூட்டணி நாடுகள் சேர்பியரை துருக்கிக்கு எதிராகக் கிளர்ந்தெழுமாறு தூண்டியது. சேர்பியர்களது கிளர்ச்சி, போல்கன் பிரதேசம் முழுதும் பரவியது. சேர்பியர்கள் துருக்கிக்கு எதிராகக் கரந்தடித்தாக்குதலில் ஈடுபட்டார்கள்.

ஒரு கட்டத்தில் அவுஸ்திரியா தனது படையைப் பின்வாங்க முடிவு செய்தது. அப்போது சேர்பியர்களை வடக்கு நோக்கித் தனது பிரதேசத்துக்கு வருமாறு அவுஸ்திரியா கேட்டுக்கொண்டது. துருக்கியின் அடக்குமுறை ஆட்சியில் அடங்கி, ஒடுங்கி வாழ்வதா அல்லது பிறந்த மண்ணைவிட்டு வடக்கு நோக்கி இடம்பெயர்ந்து வாழ்வதா என்று தீர்மானிப்பது சேர்பியர்களுக்கு இலகுவாக இருக்கவில்லை. இறுதியில் பெரும்பான்மையினர் (சுமார் 30,000-40,000 குடும்பங்கள்) இடம்பெயர்வது என முடிவுக்கு வந்தார்கள்.

சேர்பியர்கள் விட்டுநீங்கிய பிரதேசம் வெறிச்சோடியது. இதுதான் தருணம் என்று எண்ணிய துருக்கி, எஞ்சியிருந்த பிரதேச (கொசொவா, மஸ்டோனியா...) மக்களை இஸ்லாமிய மதத்தைத் தழுவுமாறு அழுத்



பெல்கிரேட் சட்டசபை

தம்கொடுத்து, அதில் வெற்றியும் கண்டது.

இப்போது போல்க்கன் பிரதேசத்தில் கணிசமான முஸ்லிம்கள் இருப்பதற்கு இந்த வரலாற்றுப் பின்னணிதான் காரணம்.

ஏனைய மதத்தவர்களைப்போல இல்லாமல் இஸ்லாம் மதத்தை விரும்பியோ அல்லது கட்டாயத்தின் பேரிலோ தழுவுபவர்கள், தங்கள் பெயர்களை அரபுப்பெயர்களாக மாற்றித் தங்களது இன அடையாளத்துக்குப் பதில் மத அடையாளத்தை ஏற்றுக்கொண்டு விடுகிறார்கள். இவர்கள் அனைவருக்கும் இஸ்லாமிய சமூகத்தில் சமவுரிமை, சமபடிநிலை (Status) இயல்பாகவே கிடைத்துவிடுகிறது.

இன்று வட அமெரிக்காவில் மிகவேகமாக வளர்ந்துவரும் மதம் இஸ்லாம்தான். அமெரிக்க கறுப்பு இனத்தவர் பலர் இஸ்லாம் மதத்திற்கு மாறிவருகிறார்கள். கிறிஸ்தவ சமயத்தில் கிடைக்காத சமவுரிமை, சகோதரத்துவம் இஸ்லாம் மதத்தில் கிடைக்கிறது என்பதே மதமாற்றத்துக்கான முக்கிய காரணியாகும்.

ஒட்டமான் பேரரசின் ஆட்சிக் காலத்தில் சேர்பியர்கள் கட்டாய மதம்மாற்றம் செய்யப்பட்டார்கள். பலர் கடுமையான வரிகளிலிருந்து தப்புவதற்குத் தங்கள் மதத்தை மாற்றிக்கொண்டார்கள். எவ்வாறாயினும், மதம்மாறிய சேர்பியர்களை ஆளும் துருக்கியர்கள் தங்களில் ஒருவராக நடத்தினார்கள்.

துருக்கி - அவுஸ்திரிய நாடுகளுக்கு இடையில் யுத்தம் (1716-1718) மீண்டும் மூண்டது. இம்முறையும் சேர்பியர்கள், அவுஸ்திரியா பக்கம் நின்று போராடினார்கள்.

யுத்தம் பொஸ்னியா, ஹெர்ஸ்கொவினா (Herzehobina) பெல்கிறேட், டனூப் பள்ளத்தாக்கு (Danube basin) எங்கும் பரவியது. யுத்த முடிவில் ஒரு அமைதி உடன்பாடு துருக்கிக்கும் அவுஸ்திரியாவுக்கும் இடையில் எழுதப்பட்டது. இந்த உடன்படிக்கையின் விளைவாக துருக்கி - டனூப் பள்ளத்தாக்கு, வடசேர்பியா, வட பொஸ்னியா போன்ற இடங்களை முற்றாக இழந்தது.

அவுஸ்திரியா - துருக்கி இடையிலான கடைசி யுத்தம் 1788-1791 இல் நடந்தது. அந்த யுத்தத்திற்குப் பெயர் டுபிக்கா (Dubica War) என்பது. இந்தமுறையும் அவுஸ்திரியர் துருக்

நக்கீரன்

கிக்கு எதிராக கிளர்ந்து எழுமாறு பொஸ்னியாவில் வாழ்ந்த கிறிஸ்தவர்களைக் கேட்டுக்கொண்டார்கள்.

1877 ஏப்ரல் 12 ஆம் நாள் சேர்பியாவும் மொன்ரெநீக்கிறோவும் ஒட்டமான் பேரரசின் மீது போர்ப் பிரகடனம் செய்தன. அதேசமயம், ரஷ்யாவை ஆண்ட இரண்டாவது அலெக்சாண்டர், ஒட்டமான் பேரரசுக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்தார்.

*(தொடரும்)*




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




# எங்களை வாழவிடுங்கள்!



வாஸ் - திறமைக்கு மதிப்பளி

உலகக்கிண்ணப் போட்டிகளில் எல்லோராலும் சாதாரணமாக எதிர்பார்க்கப்பட்டு, முடிவில் மிகப் பரபரப்பாக பேசப்பட்ட ஆட்டம், கென்யா - இலங்கைக்கு இடையில் நடைபெற்ற ஆட்டமாகும். அந்தப் பரபரப்பு அடங்கும் முன்னரே இன்னொரு செய்தி பரபரப்புக்காகப் பரப்பப்பட்டது போன்ற உணர்வொன்று ஏற்படுகின்றது. அதாவது, இந்த ஆட்டத்தில் இரண்டு அணிகளும் பந்தயக்காரர்களால் MATCH FIXING பயன்படுத்தப்பட்டனவா என்பது பற்றி ICC விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது என்பதே அது. இது தொடர்பாக ICC அப்படி ஏதும் விசாரணைக்கு உத்தரவிடவில்லை என்று தற்போது அறிவித்து "அந்தச் செய்தி வெறும் வதந்தி" என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளது.

ஆனால், முதலில் வந்த செய்தி இரண்டு அணிகளுக்கும் நிறையவே வெறுப்பேற்றியிருக்கிறது. இரண்டு அணிகளும் காட்டமாகவும், விரக்தியாகவும் பதில் அறிக்கைகளை விட்டுள்ளன. எங்கள் மத்தியவரிசை சரிவரச்செய்யவில்லை. இது தோல்விக்குக் காரணமாயிற்று என்கிறார் சனத். அணி முகாமையாளர் பொதுவான துடுப்பாட்டச் சரிவு தோல்விக்குக் காரணம் என்கிறார். கென்யா முகாம் பெரும் கோபத்துக்குள்ளாகியுள்ளது. KCA தலைவர் கருத்துக்கூறும்போது,

**நிமலா**

எந்தவொரு பலம் குறைந்த அணியும், பலமிக்க அணியை விழுத்தும்போது (MATCH FIXING) கதையைக் கொண்டு வருகிறார்கள் என்கிறார்.

நாங்கள் ஒரு பலம்மிக்க அணியை வெற்றி காணும்போது எங்களை அவமதிக்க முயலாதீர்கள் என்றும் மேலும் கூறுகின்றார்.

இந்தச் செய்தி உண்மையோ இல்லையோ என்பதைவிட ICC மற்றும் கிரிக்கெட் சார்ந்த நிறுவனங்கள், ஊடகங்கள் பார்க்கவேண்டிய அநேக வேலைகள் இருக்க, திட்டமிட்ட வகையில் சில நாடுகளை அவமதிக்க முயலும் பாங்கு தெரிகின்றது. தனக்கு



டிக்கோலா -
எங்களை வாழவிடுங்கள்

இதுபற்றி எதுவும் தெரியாது என்றும், ஒரு பத்திரிகைச் செய்தி மூலமே இதுபற்றித் தான் அறிந்து கொள்ள முடிந்தது என்கிறது ICC. இருக்கலாம், இருந்தாலும் இப்படியான செய்திகள் திறமை மிகுந்த அணிகளின் ஆர்வத்தை கொச்சைப் படுத்துவதாக இருக்கிறது. கென்யாவோ, இலங்கையோ இப்படி ஒரு காரியத்தை நினைத்துக்கூடப் பார்த்திருக்கமாட்டார்கள் என்பதை எல்லோரும் அறிவார்கள். இதில்கூட, நாங்கள் வளர்முக நாடுகள் - திட்டமிட்டே எங்களைக் கொச்சைப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்குலக சக்திகள் செய்து வருகின்றன என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கும்.

# போனால் போகட்டும் போடா!

இந்திய அணியுடன் ஒரு கௌரவமான தோல்வியை அமைதியாகவும், அடக்கமாகவும் ஏற்றுக்கொண்ட பாகிஸ்தான் அணிக்கு முதலில் நன்றிகள். அணி தோற்றாலும் அன்வருடைய திருவிழா ரசிகர்களுக்குக் கிடைத்த விருந்து தான். ஆனால், பாகிஸ்தான் அணி 273 ஓட்டங்களை எடுத்திருந்தாலும், அதனைப் பலத்த சிரமத்தின் மத்தியில்தான் இந்தியா அடித்து வென்றது என்பதை மறுக்கமுடியாது. இந்தியா, பாகிஸ்தானை வெற்றிபெறுவதற்கு பட்ட சிரமம் சிம்பாப்வே அணியை மிகவும் யோசிக்க வைத்திருக்கிறது. இன்று பாகிஸ்தான் - சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான போட்டி G.M.T நேரப்படி 8 A.M இற்கு queen's ground, Bulawayo இல் நடைபெற இருக்கின்றது.



அப்ரிடி -
எங்கே அதிரடி?


பிலிங்னட் -
உதவிதேவை

இந்தப் போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்றால், அது 12 புள்ளிகளைப் பெறும். ஆனால், சிம்பாப்வே அணியும் 12 புள்ளிகளைப் பெற்றிருக்கின்றது. பாகிஸ்தான் SUPER SIX இற்குள் செல்ல வேண்டுமாயின் அதிகூடிய Run rate பெற வேண்டும். ஆனால், சிம்பாப்வே, பாகிஸ்தானை வென்றால் Pool B யிலேயே உடனடியாக SUPER SIX இற்குள் தெரிவாகும். பாகிஸ்தான் அணியைப் பொறுத்தவரை அதிகூடிய வேகப்பந்து வீச்சு என்பது உதவாது. Idea bowling மட்டுமே கைகொடுக்கும் என்பது பாகிஸ்தானுக்குத் தெரியும். அன்வர் நல்ல FORM இல் இருப்பது பாகிஸ்தான் அணிக்கு ஒரு Plus Point. இன்சமாம் உல் ஹக் இன்றாவது அணிக்கு கை கொடுப்பாரா?

**பஞ்சநாதன் சுதர்சன்**

அக்தார், யூனூஸ் தயவுசெய்து பந்துவீசுங்கள், போட்டி போடாதீர்கள். இன்று பாகிஸ்தான் அணிக்கு கடவுள்தான் துணைசெய்ய வேண்டும்.

சிம்பாப்வே அணியை எடுத்துக் கொண்டால் - பந்து வீச்சில் ஒரு தொய்வு இருந்தாலும் Batting வரிசை சிறப்பாகவே உள்ளது. அன்டி பிளவருடைய சிரேஷ்ட ஆட்டம் அணிக்கு கைகொடுக்க வேண்டும். கிரேக் விஷாட், பிலிக்நோட் ஆகியோர் சிறப்பான துடுப்பாட்ட வீரர்கள். அதேபோல பிலிக்நோட் உடைய துடுப்புக்கு பாகிஸ்தான் வீரர்களுடைய பந்துகள் இரையாகினால் சிம்பாப்வேயிற்கு வெற்றி நிச்சயம்.

இன்றைய போட்டியின் மைதான மத்தியஸ்தர்களாக எங்களுடைய அபிமான நட்சத்திரம் E.ASOKA DE SILVA, மற்றும் BF. BOW DEN ஆகியோர் கடமையாற்றுகின்றார்கள். அத்துடன் 3 ஆம், 4 ஆம் மத்தியஸ்தர்களாக RE.KOERTZEN, S.WAD VALLA ஆகியோரும் மைதான நடுவராக RS.MADUGALLE கடமையாற்றுகிறார்கள்.

இந்தப் போட்டி முதல் சுற்று லீக் போட்டிகளின் இறுதிப்போட்டி. இந்தப்போட்டி இறுதிப்போட்டி மட்டுமல்ல. ஏதோ அணிக்கு இறுதிக்கிரியை செய்யப்போகின்ற போட்டி.

**ZIM OR PAR ARE YOU READY TO GET OUT?**

# முடியாததென்று ஒன்று இல்லை!

உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு முன்னதாக, பரஸ்பரம் நாடுகளிடையே நடைபெற்ற ODI களின் முடிவுகள் சில நாடுகளுக்கு மிகப் பாதகமாக இருந்தன. இதுதான் தொடருமோ உலகக்கிண்ணத்திலும் என்று சிலர் ஐயம் கொண்டதும் உண்மை. ஆனால், உலகக் கிண்ணம் வேறு விதமாக அமைந்து காணப்படுகின்றது என்பது இப்பொழுது விளங்குகிறது. இதற்கான உதாரணங்களை முன்னமேயே ரசித்துவிட்டோம். இறுதியாக இங்கிலாந்து - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான போட்டியிலும், அதைக் காண முடிந்தது. VB Series இல் அவுஸ்திரேலியா இங்கிலாந்தைப் படுத்தியபாடு எல்லோருக்கும் தெரியும். அதுதான் இங்கும் நடக்கும் என யாரும் எதிர்பார்த்திருந்தால் அவர்கள் Bowled. ஆரம்பத்தில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, ஏதோ பெரிதாக ஓட்டங்கள் குவித்துவிடவில்லை என்பது உண்மையே. ஐம்பது ஓவர்களில் இங்கிலாந்தால் பெற முடிந்தது 204 ஓட்டங்கள் மட்டும்தான். டிரெஸ்கொதிக் அதிர்ஷ்ட தேவதையைத் தேடித்திரிவது உண்மையிலேயே துயரமானதுதான். ஆனால், அனுபவ முதிர்ச்சி நிறைந்த அலெக் ஸ்ருவட்டின் 46 ஓட்டங்கள், அதன் பின்னர் உள்ளார்ந்த திறமைகள் நிறையக் கொண்ட இள இரத்தம் பிளிண்டோவின் 45 ஓட்டங்கள் குறிப்பிடப்பட வேண்டியன. மறுபுறமாக ஜிலெஸ்பியின் இடத்தை நிரப்ப வந்தவர் அனட்ரூ பைக்கல். அவுஸ்திரேலியப் புயல் மையங்களில் இவரும் ஒருவர். இங்கிலாந்தைச் சிதிலமாக்கிச் சீரழித்தவர் இவர்தான். இவரது சராசரி, 20 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்கள். அற்புதமான சராசரி. ஆட்டத்தின் இறுதி முடிவு இப்படித்தான் இருக்கும் என்பது போலவே நடந்தது உண்மை. ஆனால், இங்கிலாந்துச் சூறாவளி அவுஸ்திரேலியக் கப்பலை அலைக்கழித்து, சில வேளை மூழ்கிவிடுமோ என்ற பயத்தையும் ஏற்படுத்திவிட்டது என்

**நிர்மலன்**

பதை யாரும் மறுக்கமாட்டார்கள். பிரபலமான வீரர்களை வரிசையாக கில்கிறிஸ்ட், ஹேடன், பொண்டிங், டேமியன் மாட்டின் நால்வரையும் அன்ரூ கெடிக் கடித்துக் குதறிவிட்டார். அற்புதமான ஆரம்பப் பந்து வீச்சு அது. அதன்பின்னர்தான் அவுஸ்திரேலியா விழித்ததுபோலத் தெரிந்தது. கெடிக்கின் திமிருக்கு ஒரு அடி. பின்னர் மிக அவதானமாக அவுஸ்திரேலியா விளையாடியதை ரசிகர்கள் அவதானித்திருப்பார்கள். அவர்கள் பலமான அணி வரிசையே அவர்களுக்கு பதற்றத்தின் மத்தியிலான ஒரு வெற்றியைக் கொடுத்தது. மைக்கல் பெவனின் 74 ஓட்டங்கள் அவுஸ்திரேலியாவுக்கு செயற்கைச் சுவாசம் கொடுத்த மாதிரி (இன்னொரு டிராவிட் பாத்திரம்) இறுதி நேரத்தில் இங்கிலாந்தின் ஆக்ரோஷத்தை அடக்கியவர் இவர்தான். இப்பால் பைக்கல். இல்லாவிட்டால், மேற்கிந்திய அணியின் சாதனையை முறியடித்து 12 ஆட்டங்களின் தொடர் வெற்றிச் சாதனை கனவாகப் போயிருக்கும். இந்த வகையில் அன்டி பைக்கல் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டமை மிகப் பொருத்தமானதே. அதேவேளை, இங்கிலாந்து, அவுஸ்திரேலியாவுக்குச் சளைத்ததல்ல என்பதையும் நஸார் ஹுசைன் நிரூபித்து விட்டார். இறுதி இரண்டு பந்துகள் இருக்கக்கூடியதாக அவுஸ்திரேலியா எண்ணிக்கை அடிப்படையில் வென்றது உண்மைதான். ஆனால், உலகின் முதல்தர ODI அணியை பதற்றப்பட வைத்தது என்பதை, அதுவும் இதுவரை நடைபெற்ற 2003 உலகக்கிண்ணப் போட்டிகளில் முதல் முறையாகப் பதற்றப்பட வைத்தது என்ற வரையில் இங்கிலாந்துக்கும் ஒரு வகையில் வெற்றியே.

**Union Jack Flying.**

## நாளும் ஒரு வினா

**இதுவரை நடந்து முடிந்த உலகக்கிண்ணப் போட்டிகளில் அதிகூடிய உதிரிகள் கொடுத்த அணி எது?**

**பாகிஸ்தான் -59**

## கனடாவுக்கு எதிராக நியூசிலாந்து வெற்றி



கனடாவுக்கும் நியூசிலாந்துக்கும் இடையிலான நேற்றைய போட்டியில் நியூசிலாந்து 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. கனடா 47 ஓவர்களில் 196 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. நியூசிலாந்து 23 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 197 ஓட்டங்களைப் பெற்றது.

## நமீபியாவை வென்றது நெதர்லாந்து அணி

**நமீபியாவுக்கு எதிரான உலகக் கிண்ணப்போட்டியில் நெதர்லாந்து 64 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.**

**நெதர்லாந்து - 4 விக்கெட் இழப்புக்கு 314 ஓட்டங்கள்**

**நமீபியா - 250 ஓட்டங்கள்.**

கிரிக்கெட் ரசிகர்களுக்கு எமது வாழ்த்துக்கள்

PC PARADISE

## இலங்கை - தென்னாபிரிக்க ஆட்டத்திலிருந்து..



பொல்லொக்கின் ரன் அவுட்டில் இருந்து மயிரிழையில் தப்பும் ஜெயசூரியா.
உள்ளே - 18 பவுண்டரிகளுடன் சதம் குவித்த மாவன் அத்தப்பத்து.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homelan

# நீதிச்சேவை அபிவிருத்திக்கு அமெரிக்கா நிதி வழங்கும் !

வட - கிழக்குப் பகுதிகளில் நீதி நிர்வாக சேவைகளை மீளவும் கட்டி எழுப்புவதற்கு அமெரிக்க அரசாங்கம் மூன்று இலட்சம் அமெரிக்க டொலர்களை அரசாங்கத்துக்கு உதவியாக வழங்க முன்வந்துள்ளது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அரசின் நீதி நிர்வாகக் கட்டமைப்புக்கள் சிதைவடைந்தும், முற்றாகச் செயலிழந்தும் காணப்பட்டன.

அண்மைய வருடங்களாகவே ஒரு. சில பகுதிகளில் இச்சேவை மீண்டும் சீரடைய ஆரம்பித்தது. இச்சேவையை முழுமையாக மறுசீரமைத்து, அனைத்து வசதிகளையும் கொண்ட நீதி நிர்வாகச் சேவை மீண்டும் ஏற்படுத்தப்படவுள்ளது. இதற்காகவே அமெரிக்க அரசின் நிதியுதவி பயன்படுத்தப்படவிருக்கிறது.

வட - கிழக்குப் பகுதிகளில் நீதிமன்றக் கட்டடங்களைப் புதிதாக நிர்மாணித்தல் மற்றும் நீதிமன்றங்களுக்குத் தேவையான ஏனைய அனைத்து வசதிகளையும் ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளும் இந்த உதவியின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன. (க)

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003
## இன்றைய ஆட்டங்கள்

ICC Cricket World Cup South Africa 2003

மே.இந்தியா Vs கென்யா - De Beears, Diamond oval - 2 pm.
சிம்பாப்வே Vs பாகிஸ்தான் - Queen's Ground, Bulawayo - 2 pm



நேற்றுமுன்தினம் கிளிநொச்சியை வந்தடைந்த திருமதி அடேல் பாலசிங்கம் தளபதி கேணல் விதுஷாவுடன்.

## பல்கலைக்கழக ஊழியர் சங்கத்துக்கு
# உறுதியான முடிவு தரும் வரை போராட்டம் தொடருமென அறிவிப்பு

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மேற்கொண்ட வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்பான விடயங்கள் சிலவற்றிற்கு இணக்கப்பாடு ஏற்பட்ட போதிலும், அதனை நடைமுறைப்படுத்தும்வரை போராட்டம் தொடருமென பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக ஊழியர்கள் சங்கம் விடுத்த கோரிக்கைகளை நிறைவேற்ற, நிர்வாகம் அசமந்தப் போக்கினை கடைப்பிடித்து வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து - நேற்று முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளனர்.

சங்கத்தினர் விடுத்த கோரிக்கைகள் தொடர்பாக பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் கோபாலகிருஷ்ணன், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஆகியோர் ஊழியர் சங்கப் பிரதிநிதிகளை சந்தித்து உரையாடினர்.

ஊழியர் தொடர்பான பிரச்சினை கடந்த சில மாதங்களாக ஏமாற்றப் பட்டுவந்தமையால் இம்முறை உறுதியான முடிவு பெற்ற பின்பே போராட்டம் கைவிடப்படும் எனவும், அதுவரை தொடர்ந்து வேலைநிறுத்தம் நடைபெறும் எனவும் ஊழியர் சங்கத்தின் தலைவர் சி.கலாராஜ் தெரிவித்தார்.

அதேவேளை - எதிர்வரும் புதன் கிழமை நடைபெறவுள்ள வெளிவாரி பரீட்சை தொடர்பான நடவடிக்கைகளுக்கு சங்க அங்கத்தவர்கள் ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை எனவும், சங்கம் - துணைவேந்தருக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# நகரில் சடலமாக மீட்கப்பட்டவர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டவராம்

யாழ்.நகரிலுள்ள வைரவர் கோவில் பகுதியில் அநாதரவாக இருந்த சடலம் - வரணியைச் சேர்ந்தவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

வரணி சந்தையடியைச் சேர்ந்த சின்னத்துரை இந்திரகுமார்(வயது 38) என அவரது உறவினர் இனங்காட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்நகரிலுள்ள வைரவர் கோவிலடியில் அனாதரவாகக் காணப்பட்ட சடலம், யாழ். பொலிஸாரினால் மீட்கப்பட்டு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது.

இறந்தவர் கடந்த சனியன்று வயிற்றுவலியால் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு அன்றைய தினமே வைத்தியசாலையை விட்டு வெளியேறியிருந்தார்.

இவரைக் காணாது தேடிய உறவினர், பொலிஸ் நிலையத்தில் முறையிட்ட போது, மேற்படி சடலம் தொடர்பாக உறவினர்களுக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து - அவர்கள் தங்களுடைய உறவினர் என இனங்காட்டினர். சடலம் விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச)

## உலகக்கிண்ணக் கிரிக்கெட் - 2003
# மழை செய்தது சதி; ஆட்டம் சமநிலையில்
### சுப்பர் சிக்ஸ் வாய்ப்பு பறிபோனது தென்னாபிரிக்காவுக்கு!

உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற போட்டி மழையால் இடைநிறுத்தப்பட்டதால், தென்னாபிரிக்கா வெற்றி வாய்ப்பை இழந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் ஒன்பது விக்கெட் இழப்புக்கு 268 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து ஆடிய தென்னாபிரிக்கா, 45 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது.

### உலகவங்கி பிரதிநிதிகள் விஜயம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று யாழ்.வருகை தரவிருந்த உலக வங்கி பிரதிநிதிகளின் வருகை பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார்.

### திரைப்பட வழங்குநர் சங்கம் திறந்துவைப்பு

(நெல்லியடி)

நெல்லியடி மகாவித்தியாலய வீதியில் அமைந்துள்ள திரைப்பட வழங்குநர் சங்கம் கடந்த சனியன்று திறந்து வைக்கப்பட்டது.

### விசாரணைக்குழுவினர் கொழும்பு திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகள் யாழ்ப்பாணத்தில் நேற்றும், நேற்று முன்தினமும் நடைபெற்றன.

கடந்த காலப்பகுதியில் யாழ். குடாநாட்டில் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள கொழும்பிலிருந்து வருகை தந்த குழுவினர் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திலும், கொடிகாமத்திலும் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இவர்கள் தங்கள் விசாரணைகளை முடித்துக்கொண்டு நேற்று கொழும்பு திரும்பினர்.

### 20 வருடங்கள் பின் 3 நாட்கள் கோணேசர் நகரஉலா

கடந்த இருபதாண்டுகளுக்குப் பின்னர் - திருகோணமலையில் திருக்கோணேஸ்வரரின் நகர உலா மூன்று நாட்களுக்கு இம்முறை நடைபெற்றது.

மகா சிவராத்திரி தினத்துடன் இந்த நகர உலா முடிவடைந்தது. இரண்டு இலட்சம் ரூபா செலவில் செய்யப்பட்ட புதிய உலாவாகனத்தில் திருக்கோணேஸ்வரர் சமேத மாதுமையாள் நகரெங்கும் பவனி வந்த காட்சியை, பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்டுகளித்தனர்.

1983 ஆம் ஆண்டில், இறுதியாக மூன்று நாள் உலா நடைபெற்றது. 1983 இல் நடந்த இனக்கலவரத்தைத் தொடர்ந்து முற்றாகவே நிறுத்தப்பட்ட வீதியுலா - 1995 முதல் ஒருநாள் நகர உலாவாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பிரபா...

14 ஆம் திகதி நோர்வே வெளிநாட்டு அமைச்சர் மற்றும் பிரதியமைச்சர் ஆகியோர் பிரபாகரனைச் சந்திக்கவுள்ளனர்.

இச்சந்திப்பிலும கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அடேல் பாலசிங்கம், தமிழ்ச்செல்வன் ஆகியோர் உடனிருப்பார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. *(இன்னொரு செய்தி உள்ளே)*

### அரசியல்...

தேசியக் கமிட்டி உறுப்பினர் ஒருவர் இலங்கைக்கு வந்து, அப்பொழுது புலிகளைச் சந்தித்திருக்கின்றார். அப்போது புலிகள் இந்தக் கோரிக்கையை உத்தியோகபூர்வமாக அவரிடம் முன்வைத்திருந்தார்கள் என அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

### வெளிநாட்டுக்கான..

கள் வழங்கும் ஏற்பாடுகள் - தொடர்பாடல் அமைச்சில் நேற்று நடைபெற்றபோதே, 20 தனியார் நிறுவனங்களுக்கு அதற்கான உரிமை வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# அமைதிக்காக பிரார்த்திக்க யாழ். ஆயர் அழைப்பு!

(யாழ்ப்பாணம்)

உலக அரங்கில் போர் தவிர்க்கப்பட முடியாத ஒன்றல்ல. பெற்றுக் கொள்வதைவிட கொடுத்தலே ஆசீர் மிக்கது என, இவ்வாண்டுக்கான தவக்காலச் செய்தியை பாப்பரசர் விடுத்துள்ளதாக யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் நேற்று விடுத்த திருநீற்றுப் புதன் தொடர்பான செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நாளைய திருநீற்றுப்புதன் புனித நாளில் சமாதானத்தை விரும்பும் அனைவரும் உலக சமாதானத்திற்காக குறிப்பாக - எமது மண்ணின் அமைதிக்காக நோன்பிலும், செபத்திலும் ஈடுபடுமாறு ஆயர் தனது செய்தியில் கேட்டுக்கொண்டுள்ளார்.

# ஜப்பான் மாநாட்டுக்கு முன்னோடியாக மூன்று வெவ்வேறு இடங்களில் கூட்டம்

ஜப்பானில் எதிர்வரும் ஜுன் மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நடுகளின் மாநாட்டுக்கு முன்னோடியாக, மூன்று கூட்டங்கள் நடாத்தப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி ஒரு கூட்டம் அமெரிக்காவில் வொஷிங்ரனில் நடைபெறுமென முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன. இதற்கு மேலதிகமாக கொழும்பிலும், பிறேசிலிலும் இரண்டு முன்னோடிக் கூட்டங்கள் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முன்னோடிக் கூட்டங்களில் உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என்றும் தெரியவருகின்றது.

# மரண தண்டனைக்கு மின்சார நாற்காலி ?
## அமைச்சர் அமரதுங்க தகவல்

மரணதண்டனை மீண்டும் அமுல்படுத்தப்பட்டால், அதனை நிறைவேற்றுவதற்கு மின்சார நாற்காலி அல்லது மேலும் நவீன முறையைப் பயன்படுத்துவது குறித்து யோசிக்கப்பட்டு வருவதாக அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

தூக்கிலிடுவதன் மூலம் மரண தண்டனை நிறைவேற்றப்படுவது பழைய காலமுறை என்பதால், நவீனமுறையைப் பின்பற்ற வேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

நாட்டில் அதிகரித்து வரும் போதைப்பொருள் வியாபாரத்தை இல்லாதொழிக்கும் நோக்குடன் மரணதண்டனையை ஏற்படுத்துவதற்கு அவசியம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# 10 அமைச்சர்களுக்கு எதிராக லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பத்து அமைச்சர்களுக்கு எதிராக - லஞ்ச ஊழல் சம்பந்தமாக முறையிடப்பட்டுள்ளது என்று லஞ்ச விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த அமைச்சர்களில் மூவர் பிரபலமானவர்கள் என்றும், இவர்களில் இருவர் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்து ஐக்கிய தேசிய முன்னணிக்குச் சென்றவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அமைச்சர்களுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது லஞ்சக் குற்றச்சாட்டுக்கள் தினந்தினம் அதிகரித்து வருவதாகவும், 2002 ஆம் ஆண்டில் 7 நாடாளுமனற உறுப்பினர்களுக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.64 | 97.07 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 151.78 | 153.08 |
| 1 யூரோ | 103.78 | 104.94 |
| 1 சுவிஸ் பிராங் | 70.83 | 71.96 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 58.24 | 59.26 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.82 |
| 1 சவூதி றியால் | 25.84 | 25.84 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.